# பார்வைக்கு...

சஞ்சிகை.................................இளவேனில்
நான்காம் பதிப்பு.......................20 யூலை 2013
வெளியிடுவோர்.........................கேசி தமிழ் மன்றம்
வடிவமைப்பு...............................கு. மணிவண்ணனன் (டென்மார்க்)
அட்டைப்படம்.............................நித்தியா பத்மசிறி
தொடர்புகட்கு.............................கேசி தமிழ் மன்றம்
PO BOX 2516
Fountain Gate, Vic - 3805
Australia.

# பொருளடக்கம்


1. பார்வைக்கு.......................................................................... 1
2. வணக்கம்.............................................................................. 2
3. தலைவரின் உள்ளத்திலிருந்து........................................... 3
4. ஆடிக்கூழும் கொழுக்கட்டையும்...................................... 4
5. பாடசாலைக் கல்வியும்........................................................ 5
6. தேடி வந்த வாழ்க்கை.......................................................... 6
7. மலரும் நினைவுகள்................................................................ 8
8. அட்டைப் படக்கவிதை (1).................................................... 10
9. அட்டைப் படக்கவிதை (2).................................................... 10
10. மயில்....................................................................................... 11
11. கடவுள் காப்பாற்றுவார்......................................................... 11
12. ஆன்மீக விஞ்ஞானம்............................................................. 12
13. விழுதுகள் எங்கே?................................................................. 14
14. பிரதமருக்குக் கடிதம்............................................................. 17
15. புகுந்த வீட்டிற்கு புகழாரம்.................................................. 18
16. அன்புப் பாட்டிக்கு.................................................................... 20
17. ஒழுக்கம்................................................................................... 21
18. ஆத்தில வாசகன் குளத்தில எழுத்தாளன்!..... 22
19. தமிழுக்கு குரல் தந்தவன்.................................................... 27
20. நான் வியந்த எழுத்தாளர்.................................................... 29
21. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை................... 31
22. தன்னம்பிக்கை......................................................................... 32
23. உதவிக்கரம்.............................................................................. 35
24. புதியவன்.................................................................................. 36
25. ஆறு........................................................................................... 38
26. நாட்டுப்பாடல் சிலேடை......................................................... 41
27. அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது.................... 42
28. மனைவி காலை வெட்டி வைத்துத் தேய்...... 43
29. விடுகதைகள்............................................................................ 44

# வணக்கம்

கேசி தமிழ் மன்றத்தின் இளவேனில் சஞ்சிகை இப்போது உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது .

அவுஸ்திரேலியாவில் ஆரோக்கியமான தமிழ் வளர்ச்சிக்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் இளையோரின் எழுத்தாற்றலை ஊக்குவிக்க வேண்டும் என்ற அவாவிலும் தொடங்கப் பட்ட இளவேனில் சஞ்சிகை அதன் நோக்கத்தை நிறைவாக்க கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த வகையில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் பல படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் எம்மை வந்தடைந்திருக்கின்றன. இது ஒரு ஆரோக்கியமான பாதையில் நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்று சான்று பகர்வதோடு மட்டுமல்லாமல், எம்மை மேலும் மேலும் ஊக்குவிக்கின்றது. இருந்த போதிலும் அடுத்த தலைமுறையின் எழுத்தாற்றலிலும் திறமைகளிலுமே இளவேனில் சஞ்சிகையின் வளர்ச்சியும் எதிர்காலமும் தங்கியுள்ளது.

மீண்டும், இளம் ஆக்கப் படைப்பாளிகளும், இலை மறைகாயாக எழுதிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களும். உங்கள் ஆக்கங்களை இளவேனில் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு ஏற்ற வகையில் காலக்கிரமத்தில் கிடைக்கும் வண்ணம் தந்துவ வேண்டுகிறோம்.

இந்த சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்கள் பற்றிய விமர்சனங்களை, எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழி மூலமாகவோ வாசகர்களாகிய உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் விமர்சனங்கள், இச்சஞ்சிகையின் படைப்பாளிகளுக்கும், ஆசிரியர் குழுவிற்கும் பேரூக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கால வேகத்தின் ஓட்டத்தில் கலையும் இலக்கியமும் ஒன்றாகிப் பயணிப்போம்.

தமிழர் திரு நாளாம், ஆடிப்பிறப்பு நன் நாளில் இளவேனில் வாசகர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆசிரியர் குழு.

# தலைவரின் உள்ளத்திலிருந்து

சீனர், தமிழர், மலேயர் எல்லாம் கண்ணியமாக ஒற்றுமையாக வாழும் சிங்கை நகரிலிருந்து இளவேனில் இதழை உளமார வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். ஆடிப்பிறப்பு மலராக நான்காவது இதழ் விரிக்கும் இளவேனில் சஞ்சிகை சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரையும் கவரும் விதத்தில் ஆக்கங்கள் தாங்கி அழகாக வெளிவந்திருப்பது உங்களின் மேலான பங்களிப்புக்கு சான்றாக அமைகின்றது.

எமது வருங்கால சந்ததி தமது தாய்மொழியின் அடையாளத்தைத் தொலைத்து விடாமல் 'நாம் தமிழர் நமது மொழி தமிழ்' என்னும் அடையாளத்தைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல தமிழ்ப்பாடசாலைகளும் சங்கங்களும் வழங்கி வரும் அயராத பங்களிப்பின் பாதையில் ஒரு படிக்கல்லாக எழுந்து நின்று இளவேனில் தன் பணியைச் செவ்வனே செய்து வருகின்றது.

இந்த வகையில் கேசி தமிழ் மன்றம் தமிழ் சமூகத்திடம் விடுக்க விரும்பும் ஒரு அன்பான வேண்டுகோள் என்னவென்றால் உங்கள் பிள்ளைகளை தமிழில் எழுதவும் வாசிக்கவும் தூண்டுங்கள் என்பது தான். குழந்தைகள் பேசுகின்ற மழலை குழலையும் யாழையும் விஞ்சும் என்பது பொய்யா மொழி. அவர்கள் கிறுக்குகின்ற ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு மணிக்கவிதை என்பது வள்ளுவன் சொல்லாத மொழி. மடிக்கணணியில் செலவழிக்கும் நேரத்தில் ஒரு பகுதியை அவர்களின் மணிக்கவிதையில் சேமிப்போம். இளவேனிலின் எண்ணக்கருவை திண்ணமாக்குவோம் என்று உறுதிமொழி எடுப்போம்.

கேசி தமிழ் மன்றம் உங்கள் மன்றம். இளவேனில் மலர் உங்களின் சஞ்சிகை. உங்களின் ஆக்கபூர்வமான எண்ணங்களும் சிந்தனைகளும் எமது வருங்கால சந்ததியின் நல்வாழ்வுக்காக நாம் செதுக்குகின்ற ஏணிப்படிகள்.

வாருங்கள் செதுக்குவோம் படிகளை
இளைய சமுதாயம் பதிக்கட்டும்
அதன் மேல் தன் அடிகளை

நன்றி

**க. மணிவண்ணன்**
**தலைவர், கேசி தமிழ் மன்றம்**

# ஆடிக்கூழும் கொழுக்கட்டையும்





ஆடிக்கூழும் கொழுக்கட்டையும்
அம்மா அவிப்பா நாளைக்கு
கேசித் தமிழ் பிள்ளைகளை-தோழி
கூட்டி வாடி வேளைக்கு

சுடச் சுட கூழும் குடிக்கலாம்
சுவையாய் கொழுக்கட்டை தின்னலாம்
நவாலித் தாத்தா பாடிய பாட்டை
நாமும் பாடிப் பாடி ஆடலாம்

மாலையில் பட்டம் ஏற்றுவோம்-சில
வேளையில் கிளித்தட்டும் ஆடுவோம்
மேடையில் கூத்தும் போடுவோம்
மெல்லிசை பாடலும் பாடுவோம்

ஆடிப் பிறப்பை கூடிக் களித்தே
ஆனந்தம் ஆனந்தமாய் இருப்போம்
நாளை வளரும் எம் தமிழை
வேளை பார்த்தே வளர்த்தெடுப்போம்

ஆவூரான்

# பாடசாலைக் கல்வியும் பகுதி நேர வேலையும்

**நித்யா பத்மசிறி** (13 வயது)

"பாடசாலையில் படிக்கும் மாணவர்கள், பகுதி நேர வேலை செய்யலாமா?" என்று கேட்டால், நிச்சயமாக முடியும் என்பதுதான் எனது கருத்து. பகுதி நேர வேலை செய்தால், படிக்கும் நேரம் குறைந்துவிடும், படிப்பு கெட்டுவிடும் என்று எண்ணவேண்டாம். முழு நேரமாகப் படிப்பவர்கள், படிப்பில் திறமையாக செய்கின்றார்கள் என்றும் இல்லை. பகுதி நேர வேலை செய்வதால் பரீட்சையில் நல்ல மதிப்பெண்களை வாங்கத் தவறுகிறார்கள் என்றும் கூற முடியாது.

முதலில் பகுதி நேர வேலையில் சேரும்போது, என்நேர வேலையில் சேரவேண்டும் என்பதை திட்டமிடவேண்டும். பாடசாலை முடிந்து கிழமையில் இரண்டு அல்லது மூன்று நாள் பின்நேரங்களில் இரண்டுமணி நேரமோ அல்லது வார இறுதி நாட்களிலா என்று திட்டமிட வேண்டும். அதற்கேற்ப பாடசாலைப் பாடங்களை, வீட்டு வேலைகளை (Home work) அட்டவணை போட்டு செய்து முடித்துவிட வேண்டும். இது நேரத்தை திட்டமிட்டுப் (Time management) பாவிக்க பழக்கப் படுத்துகின்றது. மாணவர்கள் இதனால் ஒரு கட்டுப்பாட்டுடன், ஒழுங்கான மனிதர்களாக வாழ (Organised Person) பழகுவார்கள். அத்துடன் கிடைக்கும் நேரத்தில், மற்ற மாணவர்களைப் போல் நன்றாக கற்கவேண்டுமே (Competitiueness) என்ற வேகம் தங்களுக்குள் வந்து, போட்டி போட்டுப் படிப்பார்கள்.

அடுத்ததாக மாணவர்களின் பகுதி நேர வேலைச் சம்பளம் அவர்களின் படிப்புச் செலவுகளுக்கு கை கொடுக்கும். பாடசாலைக் கட்டணம் (School fee) புத்தகச் செலவு (Cost of Text Books), மற்றும் சுற்றுலா செலவுகளை (Excursion Fees) போன்ற செலவுகளைக் கவனிக்க உதவும். மற்றும் Student loans என்று எடுத்து கடன்களைக் கட்டுவதைத் தவிர்க்கலாம்.

இன்னொரு நன்மை என்னவென்றால், பகுதி நேர வேலை இப்பொழுது செய்வது பிற்காலத்தில் வேலை தேடுவதற்கு உதவும். வாடிக்கையாளர்களுடன் பேசிப் பழகுதல் (Customer Service), தொலை பேசியில் பேசுதல் (Telephone Manners), காசுக் கணக்குகளைக் கவனித்தல் (Cash Management), போன்றவை நிச்சயம் வேறு வேலைகளில் உதவும். மற்றும் சேர்ந்து வேலை செய்வது (Team work), பிரச்சனைகளை சமாளிப்பது (Problem Solving, Conflict Management) என்று சிறு சிறு விடயங்களில் ஏற்படும் அனுபவம் மாணவர்களின் தன் நம்பிக்கையைக் கூட்டும். அத்துடன் வேறு வேலை எடுக்கப் படியாக அமையலாம் (Stepping Stone). பிறரை அறிந்து கொள்ளலாம் (Contacts). அத்துடன் வேறு வேலைக்கு நற்சான்றிதழ்கள் (Testimonials) எடுக்க முடியும்.

ஆகையால், மாணவர்கள் தங்கள் நேரத்தை சரியாகத் திட்டமிட்டால், தங்கள் படிப்பையும் திறம்பட செய்துகொண்டு பகுதி நேர வேலையும் செய்ய முடியும் என்பதோடு அவர்களின் எதிர்காலமும் சிறப்பாக இருக்கும் என்பது என் அறிவுரை.

# தேடி வந்த வாழ்க்கை

கீதா கையடக்கத் தொலைபேசியின் ஒலி வந்த திசையில் அதனைத் தேடிக் கொண்டிருக்க அவளது மூன்று வயது மகள் “அம்மா போன் கார்” என்றாள். உடனே அதனைப் புரிந்து கொண்டவளாக மகளின் விளையாட்டுப் பொருட் குவியலில் இருந்து அதைக் கண்டெடுத்தாள்.

அடையாளம் அறியப்படாத நபரிடமிருந்து வந்த அழைப்பைப் பார்த்ததும் இதயம் பட படவென அடித்தது. இத் தடவையாவது கிடைக்காதா என அவள் மனம் ஏங்கித் துடித்ததை அடக்கியபடி “வணக்கம்” என்றாள் ஆங்கிலத்தில். ”வணக்கம் வைத்தியர் கீதா” என்று ஆங்கில மொழி நடையில் ஒரு குரல்.

“ஆம்” என்றாள் தயக்கத்துடன்.

“நான் நிக் பேசுகிறேன். உங்கள் வைத்தியருக்கான விண்ணப்பம் சார்ந்த விடயங்களை உங்களுக்கு அறியப்படுத்தவே அழைத்தேன்.” என்றான்.

விக்கி விழுங்கி. அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை, தனது இரண்டு வருட வேலை தேடும் படலமூலமாக மனம் ஏற்கனவே கணிக்கத்தொடங்கியது.

கீதா கொழும்பில் வைத்தியராக ஒரு தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றி வந்தாள். கணவன், குழந்தை, குடும்பம் என ஒரு பெண்ணை ஊரார் கௌரவமாகப் பார்க்கும் அனைத்தும் அவளுக்குக் கிடைத்திருந்தும் அவளுக்குள் வெளிநாட்டு மோகம் சூழ்ந்து கொண்டிருந்தது. அதனால் தனது அமைதியான வாழ்வில் புயலை உருவாக்கினாள். தாய்நாட்டை விட்டு வெளியேற விருப்பமில்லாத கணவனை வற்புறுத்தி குடும்பத்துடன் அவுஸ்ரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தாள். உடனேயே கணவனுக்கு பொறியியலாளராக வேலை கிடைக்கவும், மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். மகளுடன் அதிக நேரத்தைக் கழித்தாள். ஆனால் எல்லாச் சந்தோசங்களும் கால ஓட்டத்தில் திகட்டத் தொடங்கின. மகளும் பள்ளிக்கூடத்துக்குச் செல்ல

ஆரம்பித்தாள். அவுஸ்ரேலியாவில் அவளுக்கு என ஒரு நட்பு வட்டாரமும் உருவாகவில்லை. நெருங்கிய சொந்தக்காரரும் அவள் பழகும் விதத்தில் அமையவில்லை. எல்லாச் சோதனைகளிலும் தேர்வாகியும் வேலை எதுவும் கிடைக்கவில்லை என்ற விரக்தி ஒருபக்கம் இருக்க, தற்காலிகமாக வேலைக்கு இங்கு வரும் சக ஊழியர்களுக்கு மட்டும் உடனடியாக வேலை கிடைத்தது அவளது வயிற்றெரிச்சலை மேலும் வாரி இறைத்தது. இதன் காரணம் புரியாமல் இதுதான் நான் தேடி வந்த வாழ்க்கையா என்ற எண்ணம் அவள் கண்ணில் நீர்த் திரையை உருவாக்கியது.

"கீதா நீங்கள் தொடர்பில் இருக்கிறீர்களா?" என்ற குரலில் மீண்டும் நிஜத்திற்கு வந்தாள்.

"ஆம் இருக்கிறேன் கூறுங்கள்"

"உங்கள் கல்வித் தகமைகள் எங்கள் எதிர்பார்ப்புக்கு அமைவாக இருந்தாலும், உங்களுக்குப் போதிய அளவு அவுஸ்ரேலிய முன் அனுபவம் இல்லாமையால் உங்களது இவ் விண்ணப்பத்தை அடுத்த கட்டத்திற்கு அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்."

கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருந்த வரிகள். ஆனாலும் அவள் முதன் முறையாக கேட்பதைப் போல் தான் ஐந்து வருடங்களுக்கு முன் தேடி வந்த வாழ்க்கையை நினைத்து பதில் கூற முடியாமல் வாயடைத்தாள்.

குழந்தையின் அழுகுரல் அவளைத் திடுக்கிடவைக்க "நன்றி" என்ற ஒற்றைச் சொல்லில் உரையாடலை முடித்துக் கொண்டு, உறங்கி எழுந்து அழத்தொடங்கியிருந்த குழந்தையை அணைத்துக் கொஞ்சி தனது சோகங்களில் இருந்து மீண்டாள்.

- பாலகிருஷ்ணன்

# மலரும் நினைவுகள்

அப்போது நான் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியையாக இருந்தேன். அவ் வகுப்பில் உள்ள இருபத்தி நான்கு மாணவர்களும் எனக்கு கண்மணிகள் போன்றவர்கள். அந்த வகுப்பு மாணவர்களுக்கு நான் இரண்டு ஆண்டுகள் கற்பித்தேன். அவர்களுள் ஒருவன் ரமணா. அவன் சுட்டித்தனம் மிக்க குறும்புக்காரப் பையன். ஆனாலும் அவன் அறிவாற்றலும் அழகும் நிரம்பியவன். அவனது சுட்டித்தனம் எனக்கும் மற்ற மாணவர்களுக்கும் வேடிக்கையாக இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் அவன் செய்யும் குறும்புகளை நான் அவ்வப்போது கண்டிப்பதுண்டு. ஆனால் நான் கண்டிக்கும் போதெல்லாம், உடனடியாக மன்னிப்புக் கேட்க அவன் தவறியதேயில்லை. அதுமட்டுமல்ல அவனது தவறை நான் சுட்டிக் காட்டும் போது, அதற்கு அவன் நன்றி கூறத் தயங்குவதும் இல்லை. இதனால் எல்லோருக்கும் அவனை நன்றாகப் பிடித்திருந்தது.

ஒருநாள் இரசாயனவியல் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தேன். மாணவர்களுக்கு அப்பாடம் சற்றுக் கடினமாக இருந்ததால் எல்லோர் முகத்திலும் சோர்வு குடி கொண்டிருந்ததை என்னால் காணமுடிந்தது. உடனேயே அவர்களை உற்சாகப் படுத்துவதற்காக கற்பித்தலை நிறுத்திவிட்டு, மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு தாளைக் கொடுத்து, வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களதும் பெயர்களை எழுதி, அம் மாணவர்களிடம் தங்களுக்குப் பிடித்த குணங்களைப் பாராட்டி எழுதச் சொன்னேன். மாணவர்களும் அவ்வாறே செய்தனர். அத் தாள்கள் அனைத்தையும் வீட்டிற்கு எடுத்துச் சென்று தனித்தனி தாள்களில் ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் மற்ற மாணவர்கள் பாராட்டி எழுதியவற்றைத் தொகுத்து "மலரும் நினைவுகள்" என்ற தலைப்பும் இட்டேன். மறுநாள் மாணவர்களிடம் அவரவருக்குரியதாள்களைக் கொடுத்தேன். எல்லா மாணவர்களும் அவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் படித்துவிட்டு பத்திரமாக வைத்துக்கொண்டனர்.

அன்று தொடக்கம் ரமணாவிடம் புது மாற்றத்தைக் கண்டேன். மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி, சிறந்த முறையில் சித்தி எய்தி, பல்கலைக்கழகம் சென்று குறிப்பிட்ட காலத்தில் கல்வியை நிறைவு செய்து, உயர் பதவிகள் பெற்று நல்லவிதமாக வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொண்டனர். இருப்பினும் நன்றி மறவா மனத்தினராய் அவர்கள் என்னுடன் தொடர்பு வைத்திருந்தார்கள். ரமணாவும் பொறியியலாளராக பெரியதொரு நிறுவனத்தில் கடமை புரிந்தான். இருந்தபோதும் ரமணாவும் அவன் பெற்றோரும் என்னுடன் அடிக்கடி தொடர்பு கொள்வார்கள்.

ஆண்டுகள் சில கடந்தன. ஒருமுறை பாடசாலை விடுமுறையின் போது வெளிநாட்டுச் சுற்றுலா சென்றுவிட்டுத் திரும்பினேன். என்னை அழைப்பதற்காக விமான நிலையம் வந்திருந்த எனது தந்தையின் முகத்தில் சோகம் நிழலாடியதைக் கண்ணுற்றேன். “ஏன் அப்பா! ஏதும் பிரச்சனையா?” எனத் தந்தையிடம் கேட்டேன். “இல்லையம்மா!, ரமணாவின் தந்தை நேற்று என்னுடன் தொலைபேசியில் கதைத்தார்.” என்றார். ”அப்படியா? ரமணா எப்படியிருக்கிறானாம்” என ஆவலுடன் கேட்டேன். அப்பா தயங்கியபடியே “இல்லையம்மா அது வந்து...வந்து...” என ஒன்றும் சொல்ல முடியாமல் தடுமாறினார். “ஏன் அப்பா இந்தத் தடுமாற்றம். என்ன நடந்தது என்பதைச் சொல்லுங்கள்” எனப் பதறியபடி கேட்டேன். “என்ன அம்மா நான் சொல்வது, ரமணா பெரிய கட்டிடம் ஒன்றின் நிர்மாண வேலையை மேற்பார்வை செய்வதற்காகப் போன பொழுது தவறுதலாக மேலேயிருந்து கீழே விழுந்து அந்த இடத்திலேயே இறந்துவிட்டானாம்” என்றார்.

அந்த வார்த்தையைக் கேட்டதும் எனது இதயமே வெடிப்பது போல இருந்தது. நாளை மறுநாள் ரமணனின் இறுதிச் சடங்கு நடைபெறும் என்பதைக் கேள்விப்பட்டு உடனேயே நான் அங்கு சென்றிருந்தேன். என் மாணவர் அனைவரும் அங்கே வந்திருந்தனர். ரமணா பாடசாலை நாட்களில் செய்த ஒவ்வொரு குறும்புகளும், அவனைக் கண்டித்த நினைவுகளும் என் கண்முன்னே வந்து தோன்றின. அப்போது ஒரு இளைஞன் என் அருகில் வந்து “நீங்கள்தான் ரமணாவிற்கு உயர்தர வகுப்பில் இரசாயனவியல் கற்பித்த ஆசிரியரா?” என்று கேட்டான். “ஆம்” என்றேன். “நானும் ரமணாவும் ஒன்றாகத்தான் வேலை செய்தோம். அவன் எப்போதும் உங்களைப்பற்றித்தான் புகழ்ந்து பேசுவான். மலரும் நினைவுகள் என்னும் பாராட்டுப் பதிவு தன்னை எப்படி ஒரு புது மனிதனாக மாற்றியமைத்து தான் இந்த நிலைக்கு வரக் காரணமாயிற்று என ஓயாமல் சொல்லி இன்புறுவான்” என்றான்.

மரணச் சடங்குகள் முடிந்து எல்லாக் காரியமும் நிறைவு பெற்ற பின் நான் ரமணாவின் வீட்டிற்குச் சென்றேன். அப்போது ரமணாவின் பெற்றோர் என்னருகில் வந்து, “இது உங்களுக்கு நினைவிருக்கிறதா?” எனக் கூறி ஒரு தாளைக் காண்பித்தனர். அது ரமணாவைப் பற்றி மற்ற மாணவர்கள் எழுதிய பாராட்டுக்கள். அவனது வாழ்க்கைப் பாதையை மாற்றிய “மலரும் நினைவுகள்”. ரமணாவின் பெற்றோர் என்னைப் பார்த்து “மாணவர்களைப் பாராட்டவும் ஊக்கப்படுத்தி மேன்மையடையச் செய்யவும் நீங்கள் எடுத்த முயற்சியை நாங்கள் மிகவும் போற்றுகின்றோம். ஆசிரிய சேவையின் மகத்துவத்தை உண்மையிலேயே நீங்கள் நிரூபித்துவிட்டீர்கள்” என்றனர். அதைக் கேட்டதும் என் கண்களிலிருந்து கண்ணீர் கட்டுக்கடங்காமல் வழிந்தோடியது.

ஆக்கம்: கலா சிவகுமாரவேலு

# அட்டைப் படக்கவிதை (1)

சுள்ளித் தடி கட்டுக் கட்டி
சும்மாடு தலையில் வைத்து
அள்ளி அதை மேலே தூக்கி
அழகாய் நடை நடந்து......
இளவேனில் காலமடி அம்மாடி
இதமாகக் கையைத்தட்டு முன்னாடி
சிலை போல தெருவில நிக்காதடி
சீக்கிரமா வீட்டுக்கு வந்திடடி

# அட்டைப் படக்கவிதை (2)

மெல்லிடை மேவிய கண்ணகி
போலொரு கன்னிகை
மேலிடை மூடிய தாவணி
வில்லென இமையிரு ஏந்திய
முகக்கனி
அம்பெனத் தையவள் இருவிழி
இளவேனில் வேளையில் காட்டினில்
விலாறுகள் ஏந்திய தலையோடு
உச்சி வகுத்த நிலமதில்
உலாவரும் காட்டியோ காட்சி.

# மயில்

சமுத்திரா. பத்மசிறி (7 வயது)

மயில் ஓர் அழகான பறவை. ஆண் மயிலின் நிறங்கள் நீலம், பச்சை மற்றும் தங்கம். பெண் மயில் மண் நிறம். மயில் தோகை விரித்து ஆடும். மயில் அகவும். மயில் முருகனின் வாகனம். நாங்கள் சிவா விஷ்ணு கோயிலில் மயிலைக் காணலாம்.

# கடவுள் காப்பாற்றுவார்

காவியன். பத்மசிறி (10 வயது)

ஒருநாள் ஒரு பாதிரியார் ஆலயத்தில் ஜெபம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பெரிய சத்தம் கேட்டது. வீதியில் சனங்கள் அங்கும் இங்கும் ஓடினார்கள். என்ன நடந்தது என்று விசாரித்தபோது, அந்த ஊரின் பெரிய அணைக்கட்டு உடைந்துவிட்டது. ஆற்று வெள்ளம் ஊருக்குள் வருகிறது என்று அறிந்துகொண்டார்.

பாதிரியார் வெள்ளம் வருவதைக் கண்டார். அவர் மனதுக்குள் சிறிய பயம் வந்தாலும், கடவுள் தன்னைக் காப்பாற்றுவார் என்று நினைத்துக் கொண்டார். அதனால் தான் எங்கும் போகாமல் இங்கேயே ஆலயத்தில் இருப்போம் என்று நினைத்தார்.

வெள்ளம் ஆலய யன்னல் வரை வந்தபோது ஒரு தோணியில் வந்தவர்கள் “பாதிரியாரே எங்களுடன் வாருங்கள்” என்று அவரை அழைத்தார்கள். “நான் வரவில்லை.கடவுள் என்னைக் காப்பாற்றுவார்” என்று கூறி அவர்களை அனுப்பினார்.

வெள்ளம் ஏற, பாதிரியார் கூரையில் ஏறினார். இன்னொரு தோணியில் வந்தவர்களும் பாதிரியாரை அழைத்தனர். மீண்டும் பாதிரியார் மறுத்துவிட்டார்.

தண்ணீர் ஏற, ஏற கடைசியில் பாதிரியார் மணிக்கோபுரத்தில் ஏறினார். தண்ணீர் அவர் இடுப்புவரை வந்தபோது, ஒரு தோணியில் பொலிஸ் அதிகாரி அங்கு வந்து பாதிரியாரை அழைத்தார். ”நன்றி, உங்கள் அழைப்புக்கு. நான் கடவுளை நம்புகின்றேன். என்னை அவர் காப்பாற்றுவார்” என்று கூறி, அவரையும் அனுப்பிவைத்தார்.

இறுதியில் பாதிரியார் வெள்ளத்தில் மூழ்கி இறந்துபோனார். சொர்க்கத்தில் கடவுளைக் கண்டு முறைப்பாடு செய்தார். “கடவுளே உம்மை நம்பினேன், ஆனால் ஏன் நீர் என்னைக் காப்பாற்றவில்லை?” என்றார்.

அதற்குக் கடவுள் “நான் மூன்று தோணிகள் அனுப்பினேன்” என்றார்.

# ஆன்மீக விஞ்ஞானம்

**பெண்கள் நெற்றியில் குங்குமம் அணிவது ஏன்?**

நெற்றியில் குங்குமம் அணியும் போது, தீய சக்திகள் விலகும். மேலும் மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு போன்ற கிருமி நாசினிப் பொருட்களைக் கொண்டு குங்குமம் தயார் செய்யப்படுகிறது. அவ்வாறு தயார் செய்யப்பட்ட குங்குமத்தை பெண்கள் தங்களுடைய நெற்றியின் மையப் பகுதியில் அணிவதால் உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகளின் வெப்பத்தை குங்குமம் தடுக்கிறது. மேலும் குங்குமத்தின் மேல் சூரிய ஒளிப்படும்போது குங்குமத்தில் உள்ள மூலிகை தன்மையும், சூரிய சக்தியிலிலிருந்து வெளிப்படும் வைட்டமின் டி சக்தியும் உடலுக்குள் சென்று நன்மையை ஏற்படுத்தி தருகிறது.

**நெற்றியில் திருநீறு அணிவதால் என்ன நன்மை?**

மனித உடலில் நெற்றி என்பது மிக முக்கிய பாகம், அதன் வழியாக மிக அதிகமாக சக்தி வெளிப்படும், உள்ளிழுக்கவும் செய்யும். இது ஒரு வர்ம ஸாதனம் கூட. சூரிய கதிர்களின் சக்திகளை இழுத்து நெற்றி வழியாக கடத்தும் வேலையை திருநீறு செவ்வனே செய்யும், அதனால்தான் நெற்றியில் திருநீறு பூசுகிறார்கள்.

**வாசல் கோலத்தில் பூ வைப்பது ஏன்?**

வீட்டு வாசலில் மங்கையர்கள் சூரியன் உதிக்கும் முன்னால் மாக்கோலமிட்டு மகிழ்வார்கள். மணக்கோலம் காண வேண்டிய பெண்கள், கோலத்தில் நடுவில் சாணம் வைத்து அதன் நடுவில் பரங்கிப் பூவை பதித்து வைப்பார்கள் . மஞ்சள் வண்ணத்தில் பரங்கிப்பூ இருப்பதால் அதைப் பதித்து வைக்கும் இல்லங்களில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்.மாட்டுச்சாணம் கிருமி நாசினி என்பதால் இல்லத்தில் உள்ளோர்க்கு ஆரோக்கியத்தை வழங்கும். பூ மலர்ந்திருப்பது போல, வீட்டில் உள்ளவர்களும் மலர்ச்சியோடும் திகழ்வார்கள் என்பது நம்பிக்கை

**பொங்கல் திருநாளின்போது இல்லங்களில் காப்புக் கட்டுவது ஏன்?**

காப்பு நான்கு தாவரங்களைக் கொண்டு கட்டப்படுவது. கூழைப்பூ, ஆவாரம்பூ, மாவிலை, வேப்பிலைகளால் கட்டப்பட்டு வீட்டின் கூரைகளில் செருகப்படும். கூழைப்பூ பாம்புக்கடிக்கு சிறந்த விஷமுறிவு மருந்தாகும். பாம்பு கடித்து விட்டது என்று அறிந்தவுடன் கூழைப்பூவை கசக்கிச் சாறெடுத்து கண்ணில் விட்டால் அது விஷத்தை முறிக்கும் என்பது தமிழர்கள் கண்டறிந்த உண்மையாகும்.

அந்த கூழைப்பூவை பாதுகாக்கத்தான் வேப்பிலையும், மாவிலையும், ஆவாரம்பூவும் ஒன்றாக கட்டப்படுகின்றன. இப்படி பொருளறியாத பல தமிழ் மரபுகளை நாம் அறிந்து பாதுகாக்க வேண்டும்.

யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற பொது உடைமை நோக்கில்தான் வீட்டுக்கு வெளியே காப்பு கட்டப்படுகிறது. எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளை எதிர்கொள்ளவே இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

## உடலுக்கு ஆரோக்கியம் தரும் வழிபாட்டு முறைகள்

### தலைக்கான பயிற்சி :

பின் ஆலயத்திற்குள் செல்லும் முன் கோபுர தரிசனம் செய்ய வேண்டும். கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பர்.**கோபுரதரிசனம் செய்ய மேல்நோக்கி பார்க்கும் போது தலைக்கான பயிற்சி ஆரம்பிக்கின்றது. மூன்றுமுறை கீழிருந்து மேலாக பார்த்து வணங்கும் போது தலைக்கான இரத்தோட்டம் சீராகும்.**

### தோப்புக்கரணம் :

ஆலயம் உள் சென்ற உடன் முதலில் செய்வது விநாயகர் வழிபாடு. விநாயகருக்கு தோப்புக்கரணம் போட்டு புருவப் பொட்டில் மூன்றுமுறை குட்டி வழிபடுவது வழக்கம், இவ்வாறு **குட்டுகின்ற போது புத்தியைச் செயல்படுத்தும் நரம்பு சுருங்கி விரியும் இதனால் இரத்தோட்டம் அதிகரிக்கும்**

### மூளையில் பயிற்சி :

செவிகள் இரண்டையும் இழுக்கும் போது நரம்பு கீழ்நோக்கி இழுபடும் இதனால் **மூளையில் சிந்திப்பதற்கான பகுதி**செயல்படும்.

### உடல் பயிற்சி :

அடுத்து ஆலயத்தை மூன்று ஐந்து அல்லது ஏழு முறை வலம் வருவர். வலம் வரும் போது **நடப்பது ஓர் சிறந்த உடல் பயிற்சி** என்பர்.

### பிரதட்ணம் :

சிலர் **பிரதட்ணம்** பண்ணுவர். இது **குடல் தொடர்பான நோய்களுக்கும்** இரத்தோட்ட சீராக்கத்துக்கும் சிறந்த உடல் பயிற்சி என்பர்.

### நமஸ்காரம் :

அடுத்து ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்கின்றனர். அஷ்டாங்கம் என்பது தலை கையிரண்டு செவியிரண்டு மோவாய் புஜங்களிரண்டு என்னும் எட்டவயங்களும் நிலத்தில் பொருந்தும் படி வலக்கையை முன்னால் நீட்டியும் இடது கையை பின்னும் நேரே நீட்டிய பின் அம்முறையே மடக்கி வலபுயமும் இடபுயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதை பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்வதாகும். இதை மூன்று ஐந்து அல்லது ஏழு முறை என ஒற்றைப்படையில் செய்வர் இது சிறந்த ஆண்களுக்கான உடல் பயிற்சியாகும்.

இது போன்று பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்வர். பஞ்சாங்க என்பது தலை கையிரண்டு முழந்தாளிரண்டு என்னும் ஐந்தவயவங்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குவதாம். இதை மூன்று ஐந்து அல்லது ஏழு முறை என ஒற்றைப்படையில் செய்வர். இது சிறந்த பெண்களுக்கான உடல் பயிற்சியாகும். இவ்வாறு வழிபாட்டு முறைகளில் உடலுக்கு ஆரோக்கியம் தரும் முறைகளை வைத்துள்ளனர் முன்னோர்கள்.

### மாவிலைத் தோரணம் கட்டுவதன் தத்துவம் என்ன?

மாவிலை ஒரு கிருமிநாசினி. இதற்கு துர் தேவதைகளை வீட்டிற்குள் நுழைய விடாமல் தடுக்கும் சக்தியும் உண்டு. மேலும் மாவிலை அழுகுவது கிடையாது. முறையாக காய்ந்து உலரும்.

எஸ். சத்தியன்

# விழுதுகள் எங்கே?

சுமார் ஒரு பத்து வருடங்களிற்கு முன் சமாதானம் என்ற ஒரு மாயமான திருவிழா தாய்த்திரு நாட்டில் தொடங்கியபோது புலம்பெயர்ந்த பலர்போல் அவனும் ஒரு பக்தனாக தனது யாத்திரையை ஆரம்பித்தான். எங்கு போய் யாரை, எந்த உறவினரை மற்றும் எந்த நண்பரை சந்திப்பது, என்ன பேசுவது என்பதுக்கப்பால் என்னத்தை எல்லாம் பார்க்க வேண்டும் என்றும் ஒரு திட்டத்தோடு தனது தாயகம் நோக்கி பயணிக்கத்தொடங்கினான்.

அவனது பயணம் பல பழைய கவலையான ஞாபகங்களை கிழறிவிட்டிருந்தாலும், ஏற்பட்டிருந்த மாற்றங்கள் எதிர்காலம் பற்றிய சில நம்பிக்கை கீற்றுக்களை அவனுள் உருவாக்கிவிட்டது. பலவருடங்கள் பார்க்காமல் இருந்த உறவுகள், நண்பர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள் என எல்லாரையும் தேடித்தேடிச் சந்தித்தான். எல்லாரும் அவனுக்கு விருந்து வைக்கவும் சுவையான உணவுகள் செய்து கொடுக்கவும் போட்டி போட்டார்கள். மிக்க மனம் மகிழ்ந்து எல்லாரையும் திருப்திபடுத்த அவனும் சாப்பிட்டுத் தள்ளினான். ஆனால் அவன் மனதில் எப்போது தான் படித்த பாடசாலைக்கு போகப்போகிறேன் என்பது மட்டுமே ஓடிக்கொண்டிருந்தது. அந்த நாளும் வந்தது. ஓரு புகைபடக் கருவியுடன் ஒரு ஆசிரியாரின் துணையுடன் சென்றவனை பாதுகாவலர்கள் புகைப்படக் கருவி இல்லாமல் மட்டுமே பாடசாலைக்குள் செல்லலாம் என்றார்கள். மிக்க மனச் சோர்வடைந்தாலும் மனதாலேயே படம் எடுக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு நெஞ்சம் குதூகலிக்க ஏறக்குறைய இரண்டு தசாப்தத்திற்கு பின்னர் தனது பாடசாலை வளாகத்தில் கால் பதித்தான். அந்த நேரம் அவன் அந்த பாடசாலைக்கு சென்ற முதல் நாளை ஞாபகப்படுத்தி, ஆசிரியர்கள் தனது சக மாணவர்கள், அவர்களுடன் சேர்ந்து செய்த குழப்படிகளை இரைமீட்டான்.

அவனும் அவனை ஒத்த சில மாணவர்களும் தங்களது பதின்மவயதின் ஆரம்ப நாட்களில், மிகவும் குழப்படி செய்கிறார்கள். இவர்களை ஏதாவது பிரயோசனமாக செய்விக்க வேண்டும் என்று யோசித்த அந்த மாணவர்களின் கணித ஆசிரியர் அவர்களுக்குச் சொன்னார், என்னடா பொடியள் பெற்றார் வாங்கி தந்த உந்த புதுச் சைக்கிளிலை ஓடிக்காட்டி திரியிறதிலும் பார்க்க ஒரு மரத்தை நட்டு தண்ணி ஊத்தி பாருங்கோவன் என்று. அவனின் நண்பர்களில் ஒருவன் குருவிலும் தெய்வத்திலும் மிகவும் பக்தி உள்ளவன். அடுத்த நாளே ஒரு சிறிய மரத்துடன் வந்துவிட்டான். அவனுக்கும் சில நண்பர்களுக்கும் இவன் என்ன ஒரு பூவரசம் கண்டு ஒன்று கொண்டு வந்திருக்கிறான் என்று ஒரே பகிடியாக இருந்தது. அந்த மரக்கண்டை கொண்டு வந்தவனோ தான் கொண்டு வந்தது நீங்கள் சொல்வதுபோல் பூவரசு இல்லை என்று வாதிட்டான். சரி நட்டு தண்ணீர் ஊத்துவம் நடக்கிறதைப் பார்ப்பம் என்று எல்லாருமே முடிவு செய்தார்கள். பாடசாலை அயலவர் ஒருவரிடம் மண் வெட்டி கேட்ட போது அவர் இந்த பொடியள் எதையோ வெட்டித்தாட்டு மறைக்கப் போகிறார்கள் என்று ஊகித்து, ஒரு கண்டிப்பான ஆசிரியரிடம் முறைப்பாடும் செய்தும் விட்டார். பிறகு, அந்த கணித ஆசிரியர் எல்லாருக்கும் நோக்கத்தை தெளிவு படுத்தி, மண்வெட்டி பெற்றுக்கொடுத்தார்.

ஒருவாறக, அந்த மரக்கண்டை அன்றைய மதிய உணவு இடைவேளையின் போது பாடசாலைக் கிணற்றில் இருந்து சில தூரம் தள்ளி நட்டுவிட்டார்கள். அடுத்த நாள் பாடசாலைக்கு வந்த போதுதான் தெரிந்தது அந்த மரக்கண்டின் சில இலைகளைத் தவிர மற்ற இலைகளை ஒரு கட்டாக்காலி ஆடு தின்று

விட்டிருந்தது. எல்லோர் முகத்திலும் கவலை. ஒரு நண்பன் சொன்னான் தனக்கு தெரிந்த இடத்தில் பனம் மட்டைகள் இருப்பதாகவும், மதிய இடைவேளையின் போது போய் எடுத்து வந்து பாடசாலை முடிந்தபின் அந்த கண்டை சுற்றி ஒரு கூடு அடைத்தால் சரிதானே என்று. அவனும் பாடசாலையின் அயலூரில் இருக்கும் சில சகமாணவர்களும் பனம் மட்டை எடுக்க சென்றபோதுதான் தெரிந்தது குடிமனைகள் அருகிலில்லாத ஒரு வெறும் காணியின் வேலியைத்தான் அந்த சகமாணவன் கழட்டிக்கொண்டு போக ஐடியா கொடுத்திருக்கிறான் என்று. சரி வந்துவிட்டோம், இந்த மத்தியான கொழுத்தும் வெய்யிலில் யாருமே வரமாட்டார்கள் என்று நினைத்து வேலியை மின்னல் வேகத்தில் பிரித்து மட்டையை கழட்டத் தொடங்கினார்கள். அப்போது அவன் சில மாணவர்களை அந்த காணி இருந்த இரண்டு தெரு முனைவுகளிலும் நிறுத்தி யாரும் வந்தால் விசில் அடிக்கும் படியும் எல்லோரும் ஓடித் தப்பவேண்டும் என்பதுடன், பிடிபட்டால் தாங்கள் எல்லோரும் வேறு ஒரு பாடசாலையின் பெயரை கூறி தங்கள் பாடசாலையின் நற்பெயரை காப்பாற்ற வேண்டும் என்றும் தனது ஆலோசனையை தெரிவித்தான். என்ன ஒரு ஆலோசனை என்று இப்போது தனக்குள் சிரித்துக்கொண்டான். சகலரும் தமது முயற்சியில் மும்முரமாக இருந்தபோது ஒரு திசையில் இருந்து விசில் சத்தம் கேட்டது. அவனது மாணவ நண்பர்கள் சைக்கிள்களில் சிட்டாக பறந்து விட்டார்கள். அவனுக்கோ அந்த ஊர் தெருக்கள் பரீட்சையம் இல்லாதவை. ஓட முயற்சிக்கும் போது, ஒரு வாட்டசாட்டமான இளைஞன் சைக்கிளில் வருவதை கண்டுகொண்டான். நல்ல வசமாக மாட்டிக்கொண்டு விட்டேனே என்று எண்ணிக்கொண்டு ஒரு பக்கம் மிகப் பயமாக இருந்தாலும் ஏதாவது சொல்லி அந்த இளைஞனிடம் இருந்து தப்புவதற்கு யோசித்தபடி தனது சைக்கிளை ஒரு ஓரமாக நிப்பாட்டினான். அந்த இளைஞன் கேட்டான் வெள்ளை சேட்டும் கறுப்பு காற்சட்டையும் போட்டிருக்கிறாய் நீ எந்த பள்ளிக்கூடத்தில் படிக்கிறாய்? இது என்ன வேலை? இதுவா பள்ளிக்கூடத்தில் சொல்லித்தருகிறார்கள் என்று. அப்போது அந்த இளைஞனிடம் அதற்கு அவன் சொன்ன பதில் இப்போதும் அவனது நெஞ்சில் நல்ல ஞாபகமாக இருந்தது. ஆனாலும் அந்த சம்பவத்தை நினைத்தால் இப்போது கூட அவனுக்கு ஒரு சிறிய பயம் வந்து போனது. அந்த பதின்ம வயதின் ஆரம்ப நாட்களில் அது ஒரு பயங்கரமான சூழ்நிலை தானே. அதற்கு அவன் வேறு ஒரு பாடசாலையில் படிப்பதாகவும், அந்த காணி தனது சக மாணவனின் பேத்தியாரின் காணி என்பதாகவும் அவர்கள் மதில் கட்ட உத்தேசித்திருப்பதால் தனது நண்பனுக்கு வேலியை கழட்ட உதவி செய்வதாகவும் சொன்னான். அந்த இளைஞன் சரியடாப்பா வயசு போன காலத்தில் பாவம் கிழவிக்கு நல்ல உதவிதான் செய்கிறாய் என்று தட்டுத் தடுமாறி புலம்பிக்கொண்டு மீண்டும் தனது சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். அப்போதுதான் அந்த இளைஞன் உற்சாக பானம் அருந்தி விட்டு செல்கிறான் என்பது அவனுக்கு புரிந்தது. அவனோ தப்பினேன் பிழைத்தேன் என்று எல்லாப் பயத்தையும் ஒருபக்கம் வைத்துவிட்டு கழட்டிய மட்டைகளை ஒன்று சேர்த்து வேலியில் மட்டைகளை கட்டி இருந்த மெல்லிய கம்பி நூலினாலேயே கட்டிக்கொண்டு பாடசாலைக்கு மதிய இடைவேளைக்குள்ளேயே வந்து சேர்ந்து விட்டான். ஓடிய சக மாணவர்களோ அவனுக்கு என்ன நடந்ததோ என்று கவலையுடன் கூடிய பயத்துடன் பாடசாலை திரும்பி இருந்தார்கள். அன்று மாலையே முடிவெடுத்தார்கள், இனி வாழ்க்கையில் மற்றவர்களின் பொருளை திருடி இப்படியொரு வேலையும்செய்வதில்லை என்றும் மேலும் ஒவ்வொருவரும் இன்னும் நான்கு பனம் மட்டைகளும் கயிறும் கொண்டுவந்து அன்று மாலைக்குள்ளேயே ஒரு கூடு கட்டி அந்த மரக்கண்டை மீண்டும் ஆடு கடிக்காமல் பாதுகாக்கவேண்டும் என்றும். அதன் படியே கூடும் கட்டி முடித்து விட்டார்கள்.

அடுத்த நாள் பாடசலைக்கு வந்த மற்ற வகுப்பு மாணவர்களுக்கும் அந்த கணித ஆசிரியர் தவிர்ந்த மற்ற ஆசிரியர்களுக்கும் ஒரு பனம் மட்டைக்கூடு புதிதாக தோன்றியது ஆச்சரியமாக இருந்தது. அந்த தெய்வ பக்தி உள்ள மாணவன், தான் கொண்டுவந்த மரக்கண்டு என்பதால் ஒவ்வொரு நாள் காலையும் தண்ணீர் ஊற்றத் தொடங்கினான். அந்த மரக்கண்டு சிறிது சிறிதாக வளரத் தொடங்கியது. பூவரசம் மரம் இல்லை என்று எல்லோருக்கும் தெரிந்தாலும் என்ன மரம் என்று யாருக்கும் உறுதியாக கூற முடியாமல் இருந்தது. மரம் வளர்ந்தது போலவே நாட்டில் நிலவிய பதட்டமான சூழ்நிலையும் வளர்ந்தது. ஓரு கட்டத்தில், அவனது பாடசாலையே தீக்கிரையானது. மாணவர்களும் ஆசிரியர்களும் சில மைல் தொலைவிலுள்ள இன்னொரு பாடசாலையின் தயவுடன் அதன் மைதானத்தில் ஓலை கொட்டில் கட்டி கல்வியை தொடர்ந்தார்கள். பல மாணவர்கள் பிற ஊர் பாடசாலைக்கு போனார்கள். அவனும் சில நண்பர்களும் தமது உயர் வகுப்பு மட்டும் இடம்பெயர்ந்த பாடசாலையிலேயே கல்விகற்று பிரிந்தார்கள். பின் பல்வேறு காலகட்டங்களில் புலம் பெயர்ந்தார்கள். அவனுக்கோ அந்த மரத்தின் ஞாபகம் எப்போதும் வந்து கொண்டே இருந்தது. இன்று சுமார் இருபத்தைந்து வருடத்துக்கு பிறகு தனக்குத் தெரிந்த ஆசிரியர்களை சந்தித்த பின் அவனை அறியாமலேயே அவனது கால் அவன் பார்க்க வேண்டும் என்று திடமிட்டிருந்த அந்த மரம் இருந்த இடத்தை நோக்கி நடந்தது. அவனது மனமோ என்ன மரமாக இருக்கும் என்று கற்பனை பண்ணியது. அவனும் அவனது நண்பர்களும் தமது பாடசாலைக் கிணறு அருகில் மரம் நட்ட இடத்தில் ஒரு பெரிய ஆலமரம் விழுதுகள் விட்டு யாராலேயுமே என்னை அசைக்க முடியுமா என்று இறுமாப்புடன் நெடிது ஓங்கி பரந்து வளர்ந்திருந்தது. அவனது கண்ணில் இருந்து சில துளி கண்ணீர் உருண்டது. மனம் அந்த ஆலமரத்தில் ஏறி இந்த மரத்தை நட்டதிலும் அதற்கு கூடு அடைப்பதற்கு தானும் மட்டை எடுத்ததையும் உரத்து கூவ வேண்டும்போல் இருந்தது.

அந்த ஆலமரத்தடியில் சிறிது நேரம் இருந்துவிட்டு அடுத்த நாள் பல்லு விளக்க சில ஆலம் விழுதுகளை பிடுங்கி எடுக்க முயற்சித்த போதுதான் ஆலம் விழுதின் உறுதியை அவன் உணர்ந்தான். அந்த ஆலம் விழுதுகள் தம் தாய் மரத்தினடியிலேயே இருந்து கிளை பரப்பும் தாய் ஆலமரத்தை தாங்கும் போது தனது பாடசாலை என்ற ஆலமரத்தில் முளைத்த விழுதுகள் எங்கே என்று மனதுக்குள் ஒரு கணம் கேட்டுக் கொண்டான். அவனுக்குத் தெரியும் அந்த விழுதுகள் எங்கிருந்தாலும் தாம் முளைத்த ஆலமரத்தை தாங்கி கொள்கிறார்கள் என்பது. தான் பார்க்க திட்டமிட்டதுகளில் ஒன்றைப் பார்த்த திருப்தி இப்போது அவனை மகிழச்செய்தது. அவனது நண்பர்களுடன் சேர்ந்து கால் நூற்றாண்டுக்கு முன்பு நட்டது ஒரு ஆலமரம் தான் பூவரசு இல்லை என்றும், புகைப்படம் எடுக்க முடியாத சூழ்நிலையை விளக்கி, தொடர்பிலிருக்கும் நண்பர்களுக்கு ஒருக்கால் ஈமெயில் போடவேண்டும் என்றும், சமாதானக்காலம் ஒரு தற்காலிக திருவிழா இல்லாமல் நிரந்தரமாகும் போது எல்லா நண்பர்களுடனும் அந்த ஆலமரத்தின் கீழ் இருந்து பாடசாலை சிற்றுண்டிச்சாலையின் கறிபணிசும் கடலை வடையும் பிளேன் டீயுடன் சாப்பிட்டு பழைய கதைகள் பேசவேண்டும் என்று யோசித்துக்கொண்டு பாடசாலை ஆசிரியர்களிடம் விடைபெற்று விழுதுகளைத் தேடத் தொடங்கினான்.

**மங்களன்**

**யாவும் கற்பனையல்ல**

# பிரதமருக்குக் கடிதம்

Matthew Court,
Hampton Park , VIC
2013/06/10.

மதிப்பிற்குரிய பிரதமருக்கு,

நான் இதற்கு முன்னும் உங்களுக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளேன். இந்தக் கடிதம் எழுதுவதற்குக் காரணம்..

நீங்கள் அவுஸ்திரேலியாவில் மிகவும் சிறப்பாக ஆட்சி செய்து வருகிறீர்கள். அவுஸ்திரேலியாவில் பல திட்டங்களை வகுத்து அதைச் சிறப்பாக வழிநடத்தி வருகிறீர்கள். கடந்த மூன்று வருடமாக அவுஸ்திரேலியாதான் உலகத்திலேயே சந்தோசமான வாழ்க்கை வாழும் நாடுகளில் முதல் தரத்தில் இருக்கிறது. இதற்கு மக்களின் தேவை அறிந்து சேவையாற்றும் உங்களின் ஆட்சிதானே காரணம்.

இந்தச் சிறப்பான ஆட்சியின் போது சூழல் மாசடைந்து வருவது எனக்குச் சரியான மனவேதனை. இதற்கான காரணம்,

இரசாயனக் கலவைகள் கடலில் கலப்பதில் கடல்வாழ் உயிரின்ங்கள் பாதிக்கப்படுகின்றன, வாகனங்களில் இருந்து வெளியேறும் இரசாயன வாயுக்கள் வானத்தில் கலந்து ஓசோன் படையில் ஓட்டை உள்ளது. இது இப்படி தொடர்ந்து கொண்டிருந்தால் 2100 ஆம் ஆண்டு ஓசோன் படைகள் இருக்காது!!!. இதனை நிவர்த்தி செய்ய உங்களது இந்த ஆட்சியிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள
ச. துவாரகன்

# புகுந்த வீட்டிற்கு புகழாரம்

நன் நோக்கில் அனைவருக்கும் மெ஺ட் (mate) சொல்லி
சீர் தூக்கும் சீரான நிலை தந்து
இச்சைக்கு இரையாகும் சூழலுக்கும்
பச்சையான வனங்களுக்கும்
காப்பு விதிகள் ஆக்கி வைத்து
நகரங்கள் தாண்டியும் - நிற்க்கும்
புரமெல்லாம் நகராக்கி
சென்றுவர பாதையும் பண்ணி
கல்வி கூடமதில் ஏடு முதல்
வாழ்வு வரை கற்பித்து
உன்னதமாய் உடல் நலமும் உரித்தாக்கி
எம்தொன்மைக்கு மேன்மை காட்டி
கலாச்சாரம் காட்டச்சொல்லி
மனதார மகிழ்வுறும் மனையிதனால்
வையத்துள் வாழ வேண்டும் நகரிதுவோ

பரமானந்தன் விவசாயி
சொல்லிடவே பெரும் கூச்சம்
ஏர் பூட்டி உழுதல் என்றால்
உயர்வில்லா தொழில் என்று - அங்கு
எண்ணுவோர் எண்ணிலா
சேற்றில் கால் வைக்காவிட்டால்
சோற்றில் கை வைக்கவியலா
என்றே பல பாக்கள்
உழவதனை உய்யவைக்க - இங்கு
வெட்ரிக் (Fedrick) நான் வாமர்(Farmer) என்று
மார் தட்டி பெருமை கொள்வான்
யாரும் முறன் இன்றி உடன் படுவர்
மழை நீர் மறைந்தாலும்
மண் வறண்டு போனாலும்
ஒன்றாக ஊர் கூடி
நீர் துளிகள் சேமிப்பர்
பிரிகின்ற நதி நீரை
பிரிவின்றி பகிர்ந்திட்டே - இவன்
பயிருக்கு பாய்ச்சிடுவர்
ஆட்சிகள் மாறினாலும்
மறையாத முதல்வனிவன்
பயிர் செய்வோன் இல்லை என்றால்
பாரிற்கே உணவில்லை - என்று
உழவன் தொழும் தேசமிது

தொழில் கொண்டு தரம் இல்லை
சாதி என்னும் பிரிவிலை - வேலை
பழுவிற்கான ஊதியம்
விழுப்பமான வாழ்வுதரும்
சுற்றமும் தோழமைகொள்ளும்
உற்றாரும் நம்மூரில் - அவன்
உறவு சொல்லி பெருமை கொள்வர்
கலைகள் யாவும் கற்பித்தே
இவன் மக்காள் பெற்றதிறன்
பெற்றோரை பெருதுவக்கும்
தாரமும் பலம் தந்து
தன்முயல்வால் பணம் தந்து - கூடி
கட்டியதோர் அழகு அகம்
அகமெல்லாம் ஆனந்தம்
இத்தனைக்கும் இவன் தொழிலோ
சுத்தம் செய்தல் இருந்தும்
இவ்வூரில் இன்னும் இயலும்

திரைகடல் ஓடி திரவியம் திரட்ட
திரண்டு வந்தோர் இங்குண்டு
மூழ்கியும் முத்தெடுப்போம்
முயற்சி மட்டும் இழக்கிலோம் - என்றே
மூச்சு திணறியோர் இங்குண்டு
கல்விகணை சொத்துண்டு
ஏவிடவே பல ஏக்கருண்டு
எம்மை அரசும் அனுசரிக்கும்
உண்மை உழைப்பு உய்விக்கும் - என
கட்டியங்கூறும் கற்றோரும் இங்குண்டு
எல்லோரும் சமம் என்று சரி சொல்லி
வெற்றி பெறும் அரச அவை - இங்கு
உயர் திட்டமிடும் மக்கள் சபை- என்று
மனங்களிலே சுகந்திர சுகம் தந்து
மானிடத்தின் மாண்புமிகு உரிமையும் தந்தே
கண்ணியமாய் கனிவுறும்
கங்காரு தாவும் சிங்கார பூமி

........**சத்தியா(மாய்)**

# அன்புப் பாட்டிக்கு

பழைய பொலிஸ் நிலையம்,
பழம் றோட்,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
13/06/05.

அன்புள்ள பாட்டிக்கு,

உங்கள் பூட்டன் பாசத்துடன் எழுதுவது,

நான் நலம் நீங்கள் நலமா? நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. உங்கள் கடிதத்தை வாசித்து அனைவரது நலன்களையும் அறிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி.

மேலும் இம்முறை கணிதப்போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளேன், பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து பல பரிசில்களைப் பெற்றேன். இந்த விடுமுறையில் சிட்னியில் உள்ள பெரியப்பாவின் வீட்டிற்குச் சென்று வந்தோம்.

வேறு புதினம் ஒன்றும் இல்லை. நீங்கள் என்னை அணைத்து வளர்த்ததை நினைத்துப் பார்க்கும் போது என் நெஞ்சு கனத்துப் போனது. உங்கள் மடலைக் காண கடல் கடந்து வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும்,

உங்கள்
அன்புப் பூட்டன்
பி. நிகேதன்

# ஒழுக்கம்

**“ஒழுக்கம் விழுப்பம் தரினும் - ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்”**

இது ஒழுக்கம் பற்றிய திருவள்ளுவரின் திருக்குறளில் ஒன்று. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஒழுக்கம் என்பது மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. இது வயது, இடம், காலம் என்பவற்றைப் பொறுத்து ஒவ்வொருவரிடமும் வேறுபட்ட வடிவில் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஒருவர் கல்வி அறிவு நிறைந்தவராகவும், செல்வப் பொழிப்பு நிறைந்தவராகவும் இருந்து, அவர் ஒழுக்கமற்றவராகக் காணப்படின், அவர் எவராலும் மதிக்கப்படாத ஒரு மனிதராகவே காணப்படுவார். இதற்கு ஒரு உதாரணமாக, தலை முடியை எடுத்துக் கொண்டால், அன்றாடம் நாம் நமது தலை முடியை நீராட்டிச், சீவி, பூச்சூடி மிகவும் கவனமாக பாதுகாத்து வருகின்றோம். அந்தத் தலைமுடி ஒருநாள் கழன்று விட்ட போது அதனை நாம் உடனே தூக்கி வீசி விடுகின்றோம். அந்த முடி ஒரு நல்ல இடத்தில் இருந்தால் குற்றம் என்று எண்ணுகின்றோம். அந்த நேரம் நாம் நமது முடியை இவ்வளவு காலமும் எப்படியெல்லாம் பாதுகாத்தோம், எவ்வளவு நீளம், எவ்வளவு அழகு என்று ஒரு நிமிடம் கூட யோசித்து பார்ப்பதில்லை. அதே போல்தான், ஒருவர் ஒழுக்கமற்றவராக இருப்பின், அவர் சொந்தமானவரா, உடன் பிறந்தவரா, நண்பரா என்று எல்லாம் யாரும் பார்ப்பதில்லை. அவரை, அந்த சமுதாயத்திலிருந்து தூர வைத்துவிடுகின்றோம்.

ஒருவர் நல்லவர் என்று பெயரெடுக்க நாலேழு ஜென்மம் வேண்டும். கெட்டவர் என்று பெயரெடுக்க நாலு வினாடிகள் போதும். இதை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால், ஒருவர் ஒரு நல்ல விடயம் செய்துவிட்டார் என்று புகழும் போது அவரின் பழைய வரலாறு எல்லாவற்றையும் புரட்டிப் பார்த்து ஆமா, அவர் நல்லவர்தான் என்று கூறுகின்றோம். இதுவே ஒருவர் கெட்ட செயல் செய்துவிட்டாராயின், உடனேயே அவருக்கு கெட்டவர் என்று சமுதாயம் பதவி அளித்துவிடுகிறது.

சில சந்தர்ப்பத்தில் ஒருவரின் ஒழுக்கத்தை அவரைச் சுற்றியுள்ள சூழ்நிலை, அவரைச் சார்ந்து இருப்போர்கள், அவரின் வாழ்க்கைமுறை என்பனவும் மாற்றுகின்றது. இதற்கு ஒரு பழைய கால சினிமா பாட்டு ஞாபகத்திற்கு வருகின்றது.

**எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே**
**பின் நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்க்கையிலே**

இங்கு அன்னை வளர்ப்பு என்னும்போது குழந்தையைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை, வளர்ப்பு முறை என்பவற்றையும் குறிக்கின்றது.

இதேபோல எம்மால் இயன்ற அளவு நல்ல சூழ்நிலையை உருவாக்கி, அந்த நல்ல சமுதாயத்துடன் ஒன்றாகி நற் பண்புடன் நலமாக வாழ்வோமாக...

ரேகா

# ஆத்தில வாசகன் குளத்தில எழுத்தாளன்!



என் இனிய இயந்திரா", தொண்ணூறுகளின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்து வகுப்பறைகளில் அந்த புத்தகம் தவணை முறையில் கை மாறும். யார் அன்றைக்கு அதை வீட்டுக்கு கொண்டு போவது என்று போட்டி இருக்கும். அந்த இயந்திர நாயை பற்றி மாணவர்கள் கலந்து பேசுவார்கள். அடுத்த சில நாட்களில் "ஏன் எதற்கு எப்படி" என்ற இன்னொரு நூல் இதே போன்று ஒரு சுற்று வரும். மாணவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு நூலகத்தில் உறுப்பினராக இருப்பர். அம்புலிமாமா, ராணி காமிக்ஸில் ஆரம்பிக்கும் வாசிப்பு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கல்கி, பாலகுமாரன், ஜெயகாந்தன், அகிலன் வரைக்கும் நீளும். எழுத்தாளர் விழாக்கள் எல்லாம் பாடசாலை முடிந்தபின் மதியம் இரண்டு மணிக்கு, உச்சி வெயிலில், பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வழியில், சமாந்தரமாக துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்யும்போது தினம் தினம் இடம்பெறும். சில மாணவர்கள் பாலர் கவிதைத்தொகுப்பு வெளியிடுவார்கள். ஆசிரியர்கள் மாணவர்களை சிறுகதை எழுத சொல்லுவார்கள். மாலை ஆறு மணிக்கு மேசைவிளக்கில் படிக்கும் சிறுவனை எட்ட நின்று கவனித்தால், புத்தகம் நடுவே செங்கை ஆழியானின் கடல்கோட்டை இருக்கும். கதிரையை இழுத்து முற்றத்தில் போட்டு, பக்கத்தில் அரிக்கன் இலாம்பை வைத்து நிலவு வெளிச்சமும் கூட இருக்க, அக்கா வந்தியத்தேவனோடும் குந்தவையோடும் மூழ்கிக்கிடப்பார். புத்தகங்களும் வாசிப்பும் ஈழத்து வாழ்க்கையில் இன்றியமையாத பின்னிப்பிணைந்த தோழனாக, தோழியாக, சுற்றமாக எப்போதுமே இருந்திருக்கிறது.



இன்றைக்கு இருபது வருடங்கள் கழித்து, ஏதாவது நூல்கள் இப்படி மாணவர்கள் மத்தியில் உலவுகிறதா? மாணவர்கள் நூலகங்களில் தவம் கிடக்கிறார்களா? இரவில் கணணி, செல்லிடப்பேசி எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு நிலவு ஒளியிலே பதின்மத்து இளைஞனோ இளைஞியோ புத்தகத்துடன் மூழ்கிக்கிடக்கின்றனரா? இந்தக்கேள்விகளுக்கு வெறுமனே இல்லை என்று ஒற்றை சொல்லில் பதில் சொல்வது சரியல்ல. வாசிப்பு என்பது ஒரு படித்த சமூகத்தின் ஆதாரமான விஷயம். அது அப்படியே இரு தசாப்தங்களில் ஒழிந்துபோக சந்தர்ப்பம் இல்லை. ஆனால் குறைந்து போயிருக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது. இதற்கு காரணமாக பேஃஸ்புக், செல்லிடப்பேசிகள், திரைப்படங்கள் போன்றவற்றை சொல்வதும் சரியா என்ற சந்தேகம் வருகிறது. இவை காலத்தின் பரிமாணங்கள். எல்லா கலாச்சாரங்களிலும் இவை பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதற்காக வாசிப்பு ஏனைய கலாச்சாரங்களில் குறைந்துபோனதாக செய்தியில்லை. வாசிப்பு குறைந்துவிட்டது, புத்தகவிற்பனை அருகிவிட்டது என்ற புலம்பல்கள் ஆங்கில படைப்பு சூழலில் வருவதில்லை. ஆனால் தமிழில் இது இருக்கிறது. ஒரு தலைமுறையே திரையுலகம் சார்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. எங்கே தவறு இருக்கலாம்?



ஒரு காலை நேரத்தில் மெல்பேர்ன் புகையிரதப்பயணம். பாடசாலை மாணவர்கள். அலுவலம் செல்கின்ற பயணிகள். பல்வேறு வகையான பதவிகளில் இருப்பவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் என்று விதம் விதமான வயது வித்தியாசங்கள். அனேகமான பயணிகள் ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தனர். பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள். Kindle, iPad போன்ற கருவிகளில் இருக்கும் மின்நூல்கள். அவர்கள் வாசித்துக்கொண்டிருந்த புத்தகங்களை குறிப்பெடுக்க தொடங்கினேன். “Italy a short history”, “A song of ice and fire”, “Echo Rising”, “How Branding Grows”, “Call the midwife”, “Restaurant at the End of Universe” , “Life of Pi”, “Outliers”. ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகையான நூல்கள். சிலது நாவல்கள். சிலது பயணம் சார்ந்தது. சிலது ஆன்மிகம். சிலது சிந்தனைக்கு விருந்தளிக்க கூடியது. சிலது தொழில்சார்ந்தது. சிலது விஞ்ஞானம். முக்கியமான விஷயம் அனேகமான புத்தகங்கள் துறைபோன இலக்கியவாதிகளால் எழுதப்படவில்லை. பல் துறை சார்ந்த நிபுணர்கள், அவர்கள் துறைசார்ந்து படைப்பிலக்கியத்தையோ அல்லது அவர்களுடைய தொழில்சார் நூல்களையோ எழுதுகிறார்கள். விளைவு, படைப்புகளில் ஒருவித பரம்பல் தன்மை இருக்கிறது. விரும்பிய துறையில் ஒரு புத்தகத்தை தேர்வு செய்து வாசிக்கமுடிகிறது. நடைமுறை வாழ்க்கை படைப்பில் வருகிறது. வாசிக்கும்போது எம்மால் அந்த நூல்களின் பாத்திரங்களோடோ, கதை சொல்லியோடோ, விஷயங்களோடோ பயணிக்க முடிகிறது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீனுக்கு பன்னிரண்டு வயது இருக்கும். அப்போது குடும்ப நண்பர் ஒருவர் ஐன்ஸ்டீனுக்கு பரிசாக கொடுத்த புத்தகம் “மக்களுக்கான இயற்கை விஞ்ஞானம்(People’s Natural Science)”. அந்த புத்தகத்திலே இருக்கின்ற ஓடும் ரயில் சார்ந்த சுவாரசியமாக விளக்கப்பட்ட விஞ்ஞான பரிசோதனை சிறுவன் ஐன்ஸ்டீனின் மூளையில் பசுமரத்தாணி போல ஏறிவிட, பின்னாளில் உலகையே வியக்கவைத்த சார்புவிதியை ஐன்ஸ்டீன் கண்டுபிடிக்க அது காரணமானது.




டக்ளஸ் அடம்ஸ், தொழில்நுட்பத்தை படைப்பிலக்கியத்தில் சுவாரசியமாக சூடு குறையாமல் கொண்டுவந்த ஜாம்பவான். எழுபதுகளில் அவர் எழுதிய Hitchhiker’s Guide To Galaxy (ஒரு வழிப்போக்கனின் பிரபஞ்ச வழிகாட்டி), அன்றைய இளைஞர்களின் பைபிள். புதுமையான எண்ணங்களை, வித்தியாசமாக சிந்திக்கவைக்கும் ஆற்றலை அந்த தலைமுறை இளைஞர்கள் மத்தியில் இவருடைய படைப்புகள் ஏற்படுத்திக்கொடுத்தன. சமகாலத்தில் சிலிக்கன் வலியில் இடம்பெற்ற தகவல் தொழில்நுட்ப புரட்சியின் ஊற்றுகளான ஸ்டீவ் வொஸ்னியாக், ஸ்டீவ் ஜொப்ஸ், பில் கேட்ஸ் போன்றவர்கள் தொடங்கி, பின்னாளில் உருவான கூகிள் நிறுவனத்து எரிக் ஷிமிட், லாரி பேஜ் போன்ற, தொழில்நுட்பம் மூலம் சிறந்த நிறுவனங்களை ஆற்றுப்படுத்தி முன்னுக்கு வந்த எல்லோருக்குமே டக்ளஸ் அடம்ஸ் ஒரு பிதாமகன். கூகிள், அன்றோயிட், பேபில் போன்ற மென்பொருள் பெயர்கள் கூட இவர் நாவல்களில் இருந்தே எடுக்கப்பட்டன. இத்தனைக்கும் அடம்ஸ் ஒரு நாவலாசிரியர் மாத்திரமே. ஆனால் ஆச்சர்யமான நாவலாசிரியர். பண்ணைகளையும், குதிரைவீரர்களையும், குடும்பத்து யதார்த்தங்களையும் சுற்றிக்கொண்டிருந்த எழுத்தை புதுமைப்படுத்தி

பிரபஞ்ச சூழலுக்கு கொண்டு சென்றார். பூமியில் நிகழும் எல்லாமே எவ்வளவு அபத்தமானதாக இருக்க கூடும் என்று உணர்த்த கிரகம் கிரகமாக வாசகர்களை பயணிக்கவைத்தார். விளைவாக அடம்ஸ் புதுமையாக சிந்திக்கும் ஒரு தலைமுறையையே உருவாக்கினார்.

சயந்தன் என்ற ஈழத்தை சேர்ந்த இளைஞன். ஒரே வாரத்தில் மூன்று புத்தகங்கள் வாசிப்பவன். புத்தகங்களை ஒலிவடிவில் கேட்பவன். “ஏன் நீ தமிழ் புத்தகங்களை வாசிப்பதில்லை?” என்று கேட்டேன். “Non Fiction, வகை விஞ்ஞான, பொருளியல் சார்ந்த, நவீன உலகத்துக்குரிய புத்தகங்களை தமிழில் தன்னால் இனம் கண்டுகொள்வது சிரமமாக இருக்கிறது” என்றான். “ஆங்கிலத்தில் அது அதிகம் கிடைக்கிறது. சிறந்ததை, எனக்கேற்றதை தேர்ந்தெடுக்க கூடியதாக இருக்கிறது, தமிழில் எல்லாமே இலக்கியமாக இருக்கிறதே” என்று சிரித்தான்.

சயந்தனை எப்படி தமிழில் வாசிக்கவைப்பது? தமிழிலக்கிய சூழலில் டக்ளஸ் அடம்ஸ், டெர்ரி பிரச்சட் போன்ற ஜாம்பவான்கள் ஏன் உருவாகவில்லை? ஏன் மக்களுக்கான விஞ்ஞானத்தை நம் பிள்ளைகளுக்கு நாம் வாங்கிக்கொடுப்பதில்லை? உலகமயமாக்கல் சார்ந்த பொருளாதார, வியாபாரம் சார்ந்த நூல்கள் ஏன் தமிழில் இல்லை? என்ற கேள்வி இப்போது எழுகிறது. அப்படியே வெளிவந்தாலும் அது ஏன் மக்களை சென்றடைவதில்லை? அப்துல் கலாமின் அக்கினிச்சிறகுகள் கூட ஒரு மொழிபெயர்ப்பு தான். புதுமைப்பித்தன் நாற்பதுகளில் இந்த அதிசயம் தமிழில் ஓரளவு முடியும் என்று கோடி காட்டினார். பின்னாளில் சுஜாதா அதை பல படிகள் மேலே கொண்டு சென்றார். ஆனால் அவை தவிர அனேகமான தமிழ் படைப்புகள், இலக்கியங்கள் என்று அடைப்புக்குள்ளேயே சுருங்கிவிட்டன. அ.முத்துலிங்கம் போன்ற துறை போனவர்கள் கூட ஒரு எல்லையை விட்டு வெளியே வர முயலவில்லை.



எழுத்து என்பது இங்கே இலக்கியவாதிகளுக்குள் சுருங்கிவிட்டது. முறையாக வாசித்து, உலக இலக்கியங்களை படித்து, கூட்டங்களுக்கு சென்று, வரையறைகளை வகுத்து எழுதும் எழுத்தாளர்களின் படைப்புகளில் அந்த இலக்கியத்தன்மை இயல்பாகவே ஒட்டிக்கொண்டு விடுகிறது. புதுமை, சுயத்தை அங்கே சில மாற்றுக்கள் குறைந்துவிடுகிறது. வாழ்க்கையை அதன் யதார்த்தங்களோடு தருவது மட்டுமே இலக்கியம் என்ற கருத்தியல் மீதான கொண்டாட்டம், சுஜாதா என்ற மாபெரும் தலைமுறை எழுத்தாளனுக்கு சாகித்திய அக்கடமி விருதை கைக்கெட்டாமல் செய்தது.

பல்துறைசார் நிபுணர்கள் தமிழில் அவர்கள் அனுபவங்களை கோர்த்து ஒரு படைப்பை அமைப்பது என்பது குறைந்துவிடுகிறது. அப்படி எழுதுபவர்கள் கூட தங்கள் துறையை மறுத்து மீண்டும் குடும்ப வாழ்க்கையையும், போரின் அல்லல்களையும் எழுத்தின் கருப்பொருள் ஆக்குகின்றார்கள். இந்த தலைமுறை இளைஞர்கள் செய்யும் தொழில்கள் ஏதோ ஒரு மென்பொருள் நிறுவனத்தின் கணனித்திரையின் முன்னேயோ அல்லது வங்கி முகாமைத்துவ முன்றலிலோ இருக்கும்போது, தமிழ் நூல்கள் கிராமத்தையும், நனைவிடை தோய்தலையும், குடும்ப சிக்கல்களையும், சாதியம், பெண்விடுதலை, கம்யூனிசம் என்ற வழமையான கருப்பொருட்களுடனேயே சுற்றிவருகின்றன. வரக்கூடாது என்றில்லை. ஆனால் அவை மட்டுமே வருவது, வாசகனை தமிழை விட்டு அவனுக்கு தேவையான அனுபவத்தை கொடுக்கும் ஆங்கிலத்துக்கு அழைத்துச்செல்கிறது. நல்ல வாசகனை தமிழுக்குள் இழுத்துவைத்திருக்க, அவனுக்கேற்ற எழுத்தை நாம் தரவேண்டும். காலத்தை ஒட்டிய எழுத்துக்கள் நமக்கு வேண்டும்.

“இரண்டு வருடங்களுக்கு முன்னர் அந்தரோமீடாவுக்கு பயணம் செய்த என் அண்ணா திரும்பும் போது வயது குறைந்து தம்பியாக மாறி இருந்தார்”

என்று ஐன்ஸ்டீனின் சார்புத்துவத்தை வைத்து இளமையான நாவல் எழுதலாம். விஞ்ஞானம் விளக்கலாம்.

“முதல் நாள் அலுவலகம்; முன்னே 21இஞ்சி கணனித்திரை, கொமாண்டுகள் எதுவுமே புரியவில்லை. பக்கத்தில் இருந்தவனோ இரண்டு காதுகளிலும் ஏ ஆர் ரகுமானை அலறவிட்டுவிட்டு ஜாவாவில் வெளுத்துக்கட்டிக்கொண்டிருந்தான். கேட்கலாம் தான். அவன் சொன்னால் கூட புரியவா போகிறது?”

என்று ஒரு நாவலின் இடை வரி இருக்கலாம்.

இதைத்தான் வாசகனாக இன்றைக்கு தேடிக்கொண்டிருக்கிறேன். எழுதினால் இன்றைய இளைஞன் இதை வாசிக்காமல் போகமாட்டான். செங்கை ஆழியான் சொல்லித்தந்த வன்னியையும் நெடுந்தீவையுமே இன்றைக்குமே சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? அதற்கு தான் செங்கை ஆழியான் இருக்கிறாரே. எங்கள் அவல நிலையை சொல்லத்தானே அதற்குள் அகப்பட்டு அல்லலுற்ற ஏராளமான எழுத்தாளர்கள் இருக்கிறார்களே? எழுதுகிறார்களே? அதை ஏன் எல்லோருமே எழுத முயலுகிறார்கள்? எவ்வளவு காலத்துக்கு நனைவிடை தோய்ந்துகொண்டே கிடப்பது?

ஒரு எழுத்தாளனை இதைத்தான் எழுதவேண்டும் என்று கட்டுப்படுத்த முடியாது, கூடாது. எங்கள் உடனடித்தேவை கலப்படமில்லாத புது இரத்தம். பல்துறை களத்தை தமிழுக்கு கொண்டுவர, இலக்கியவாதிகள் அல்லாதோர் எழுத தொடங்கவேண்டும். ஒவ்வொருவருக்குள்ளும் ஏராளமான கதைகள் அனுபவங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு கொஞ்சம் கற்பனை சேர்த்தால் அழகான நாவல்கள், படைப்புகள் நிச்சயம் கிடைக்கும். இன்றைக்கு என் எழுத்தை வெளியிட பதிப்பாளர் இல்லையே, எவருமே வாசிக்கமாட்டார்களே என்ற கவலையும் கிடையாது. இணையம் இருக்கிறது. பதிவுலகம் இருக்கிறது. வாசகன் தீனி இல்லாமல் இங்கே பட்டினி கிடக்கிறான். எழுத்தாளனோ அவனை விடுத்து வேறு யாருக்கோ எழுதிக்கொண்டிருக்கிறான். இருவரும் இணைந்தால் ஆச்சர்யங்கள் நிகழலாம். இணையத்தில் காப்பு பணம் கிடைக்காது. சல்லி பெயராது. ஆனால் வாசகனுக்கும் எழுத்தாளனுக்குமிடையில் சம்பாஷனை இருக்கும். கருத்து வேறுபாடுகள், கலந்துரையாடல்கள் என்று ஈற்றில் எழுத்தாளனும் வாசகனும் ஒரே புள்ளியை அடையும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். நிஜமான எழுத்தாளனுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

இன்னுமொன்று, வாசிப்பு தளம் என்பது இங்கே மாறிவிட்டது. தேடல் காகிதங்களில் இருந்து இடம்பெயர்ந்து இணையத்தில் விரிந்து கிடக்கிறது. மின் நூல்கள், இணையத்தளங்கள், பதிவுலகம், Facebook, Twitter என்பதில் இருந்து Ted (ted.com), Khan Academy(www.khanacademy.com), pod casts, ஒலி நூல்கள் என்று படைப்பாளியும் தேடுபவனும் சேரும் புள்ளிகள் பரந்திருக்கின்றன. தமிழ் எழுத்துக்கள், ஓரளவுக்கு இதை கொஞ்சம் கொஞ்சமாக கொண்டாட ஆரம்பித்தாலும், இன்னமுமே பின் தங்கியே இருக்கிறது. அப்படியே கொண்டாடினாலும், அவற்றை அரசியலுக்கும், சினிமாவுக்கும், தீவிர இலக்கியத்துக்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள். சொல்லும் தளம் மாறியிருக்கிறது. ஆனால் சொல்லும் விஷயம் இன்னமுமே அப்படியே.



ஒரு பொறியியலாளன் கட்டட நிர்மாண களத்தை வைத்து, அதில் புதுமை சேர்த்து படைப்பை சிந்திக்கட்டும். மென்பொருள்துறையாளன் அந்த துறையின் அதிசயங்களை தமிழ் படுத்தட்டும். வைத்தியன் தமிழில் மருத்துவம் சார்ந்த எழுத்துகளை தரட்டும். ஆசிரியன், விஞ்ஞானி, வியாபாரி, தொழிற்சாலையில் வேலை செய்பவர் எல்லோருமே எழுத ஆரம்பிக்கவேண்டும். தொடர்ந்து எழுதவேண்டியதில்லை. ஒரு நாவல் கூட போதுமானது. ஏன், ஒரு சிறுகதையே காலத்துக்கும் நிலைக்கும். அவர்கள் எழுதுவதற்கு கம்பரையும், ஷேக்ஸ்பியரையும் படித்திருக்கவேண்டிய அவசியம் கிடையாது. இரவிரவாக வாசிக்கும் ஒருவன் முயன்றால் நாலு வரி எழுதலாம் என்று தோளில் தட்டிக்கொடுக்கவேண்டும். எழுத்து ஒரு போதை போன்றது. ஆரம்பித்துவிட்டால் அப்புறம் யாருமே தடுத்து நிறுத்தமுடியாது. சித்திரம் போல அது கைப்பழக்கம். எழுத எழுத படியும், வளரும். ஆரம்பிக்கவைப்பது தான் சவால். அதை செய்தோமானால் புற்றீசல் போல எழுத்துக்கள் கிளம்பும். அவற்றில் பல சொதப்பும் தான். ஆனால் நூறு கிளம்பும்போது பத்து தேறும். அதில் இரண்டு புரட்சி செய்யும். ஒன்று தலைமுறையை மாற்றியமைக்கும். அந்த ஒரு நூல் வெளிவர நாங்கள் இத்தனை அத்திவாரங்கள் போடவேண்டும். எழுத்தாளன் எழுத தொடங்கினால் தான், ஆங்கிலம் பக்கம் சாய்ந்திருக்கும் இளைய தலைமுறை வாசகன் தமிழ் பக்கம் தலைவைத்து படுப்பான்.

எழுத்தாளர் விழா அதை செய்ய ஒரு கல்லை எடுத்து வைக்கும் என்று நம்புவோம். தமிழ் மேலான உணர்ச்சிவசப்பட்ட தன்மையை மீறி, மொழியை ஊடகமாக கொண்டு எழுதப்படும் விஷயங்கள், அதன் பரப்புகள் இலக்கியம் தாண்டி விரியட்டும். பல்வேறு துறைபோனவர்களை ஒருங்கிணைத்து அவர்கள் எழுத தூண்டுகோல் புரியட்டும். பழமை மதிக்கப்பட்டு புதுமை படியேற ஆரம்பிக்கட்டும்.

நன்றி

ஜே.கே

இந்த கட்டுரை சிட்னியில் 20-04-2013 அன்று நடந்த எழுத்தாளர் விழாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மீள்வாசிப்பு செய்து திருத்தங்கள் முன்மொழிந்த சக்திவேல் அண்ணா, வாலிபன், சயந்தன், கேதா மற்றும வீணாவுக்கு மிகவும் நன்றிகள்.

(திரையிசை மன்னன் T.M.S மறைவுக்கு ஒரு உண்மை ரசிகனின் உள்ளத்து அஞ்சலி)

# தமிழுக்கு குரல் தந்தவன்



இசை அரசனே
இமயத் தடம் பதித்த இன்பத் தமிழுக்குக்
குறள் தந்தவன் வள்ளுவன்
குரல் தந்தவன் நீ

தாளமும் ராகமும் மட்டுமே
பாடலின் ஆதாரமென்ற
வரையறைக்குள் வசப்பட்ட
திரையுலகச் செவிகள்
பாவம் தான் பாட்டுக்கு ஜீவாதாரம் என்ற
பாலபாடம் பயின்றது உன் பாடல் கேட்ட பின்பு தான்

கூடல் நகர் துறந்து கோயமுத்தூர் வீதிகளில்
பாடல் வாய்ப்புக்கு அலைந்த பாலைவன நாட்களில்
'கிருஷ்ண விஜய'த்தில் கிட்டிய முதல் வாய்ப்பு
திரையிசை வாழ்க்கையின் திறவுகோல் ஆனது
அத்தி பூத்தாற் போல அடுத்தடுத்த வாய்ப்புகள்
நத்தை ஊர்வலம் போல நகர்வலம் வந்தன
பாராளும் குரலின் பாங்கினை அறியாமல்

ஈராண்டு காலம் இளைத்தே கழிந்தபின்
துவண்ட உன் உள்ளத்தின் ஏக்கத்தை நீக்கி
தூக்கி நிறுத்திட வந்தது 'தூக்குத் தூக்கி'
முத்தமிழின் மூன்றாம் தமிழின் வாயசைவுக்காக
அத்தமிழின் இரண்டாம் தமிழின் நாவசைந்த போது
பாடுவது பாடகர் திலகமா நடிகர் திலகமா என்று
பட்டிமன்றமே நடாத்தியது பட உலகம்

தென்றல் உன் பெயரைத் திசைகளுக்குச் சொன்னது
வெண்கலக் குரலுக்கு செங்கம்பள வரவேற்பு
வாசலில் வைத்தே வாய்ப்பில்லை என்றவர்
வருக வருக என்று வாசல் தேட  வந்தார்கள்
'மலைக்கள்ளன் மக்கள் திலகத்'தில்
உன் குரல் மறைந்தது
மக்கள் மனங்களில் நீங்காமல் நிறைந்தது

'கற்பனை என்றாலும்' என்று கவிஞர் வாலி
உன் முகவரிக்கு முத்திரை குத்திய அஞ்சல்
உன் காந்தர்வக் குரலால்
இன்றளவும் உள்ளது தமிழர் தம் நெஞ்சில்


'உள்ளம் உருகுதையா' என்னும்
உன் ஒரு வாசகத்திற்கு
உருகுமா உருகாதா அந்தத் திருவாசகம்

சரித்திரம் படைத்த
சாதனை மன்னனே
அரிதாரம் பூசிய அத்தனை முகங்களுக்கும்
அவதாரம் கண்ட ஆண்மைக் குரலோனே
வாத்தியங்களை மீறி வான் எழும் குரலுக்கு
சாத்தியமான சாரீரம் உனக்கு
எத்தனை நூற்றாண்டு வந்தாலும் சென்றாலும்
அத்தனை காலமும் உன் இசை
வாழும் எந்நாளும் ஏனென்றால்
தமிழுக்குக் குறள்  தந்தவன் வள்ளுவன்
குரல் தந்தவன் நீ

**-சிங்கப்பூரிலிருந்து**
க. மணிவண்ணன்

# நான் வியந்த எழுத்தாளர்

அனிருத் சிவராமகிருஷ்ணமூர்த்தி



அமரர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில், புத்தமங்கலம் என்னும் ஊரில், ஒரு பிராமணக் குடும்பத்தில், செப்டம்பர் 9ம் தேதி 1889ம் ஆண்டு பிறந்தார். ஆரம்பப் பள்ளிப் படிப்பை கிராமத்தில் முடித்து, திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.

### சுதந்திரப் போராட்டத்தில் கல்கி

1921ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியபோது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப் படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1921ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923ல் அவர் நவசக்தி என்னும்பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் 1923ல் வெளியானது.

இவரது படைப்புக்களில் உள்ள தியாக பூமி, சோலை மலை, இளவரசி, அலை ஓசை, ஆகிய புதினங்கள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிக் கூறுகின்றது. இவர் வரலாற்றுப் புதினங்களாகிய பாரத்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் மற்றும் பல்வேறு சிறுகதைகளை எழுதியுள்ளார்.

### என்னை வியப்பில் ஆழ்த்திய அவரது எழுத்துக்கள்

அவரது படைப்பின் தன்மை அத்தகையது. அவரின் சரித்திரக் காப்பியங்களான பாரத்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்றவை காலத்தால் அழியாத காவியங்களாகப் போற்றப்படுபவை. இன்னும் எத்தனை நூற்றாண்டு காலத்திற்குப் பிறகும் அவற்றை எடுத்துப் படித்தாலும், அமரர் கல்கியின் மயக்கும் நடையும், எளிமையும் இனிமையும் நிரம்பிய தமிழும், கதையின் வசீகரப் போக்கும் ஒரு இனிய சூழலுக்குள் நம்மை இழுத்துப் போவதை உணரலாம்.

நான் இப்பொழுது பொன்னியின் செல்வன் படித்துக் கொண்டிருக்கிறேன்.. அப் புத்தகத்தைப் படிக்கும் பொழுது சோழர் காலத்தில் நான் இருக்கின்ற மாதிரியும், வந்தியத் தேவனுடன் வீரநாராயண ஏரியில் பயணம் செய்வது போலவும் இருக்கின்றது. ஆழ்வார்க்கடியான், நந்தினி, பெரிய பழுவேட்டரையர், குந்தவை தேவி, ஆதித்த கரிகாலன், வானதி, சேந்தன், அமுதன், செம்பியன் மாதேவி, அருள்மொழி வர்மர் ஆகிய கதாபாத்திரங்களை நேரில் பார்ப்பது போலவும் இருக்கிறது.

மீண்டும் மீண்டும் படிக்கும் பொழுது புதிது புதிதாக கருத்துக்கள் தோன்றின. சரித்திர நாவல்களின் மேல் ஆர்வம் ஏற்பட கல்கியின் படைப்புக்களே காரணம். அன்றைய சோழ தேசத்தில் நிலவிய ராஜாங்கப் பிரச்சினைகள், வகுக்கப்பட்ட யுத்த வியூகங்கள், தீட்டப்பட்ட சதி ஆலோசனைகள் ஆகியவை ஒரு மர்ம நாவலுக்குரிய அத்தனை படபடப்பையும் ஏற்படுத்திவிடுகின்றது. கற்பனையில் அவர் ஏதும் எழுதவில்லை. பல கல்வெட்டு ஆராச்சிகளையும், உண்மைத் தகவல்களையும் அறிந்து, பின்னரே எழுதியுள்ளார்.

### எனக்குப் பிடித்த கதாபாத்திரம்

### வந்தியத் தேவன் (பொன்னியின் செல்வன்)

அவரின் குரும்புத் தனமும், வீரமும், எந்த ஆபத்தில் மாட்டிக் கொண்டாலும் தப்பித்துவிடும் சமயோசித புத்தியும் மிகவும் பிடிக்கும்.

### நான் கேட்டறிந்த பிற வரலாற்று நாவல்களின் சிறப்பு

### சிவகாமியின் சபதம்

இக் கதை இந்திய சுதந்திரப் போராட்டம் உக்கிரம் கொண்டிருந்த காலத்தில் எழுதப்பட்டது. இக் கதை கல்லிலே கலை வண்ணம் கண்ட பல்லவ மன்னர்கள், குறிப்பாக மகேந்திர பல்லவர், நரசிம்ம பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுரத்துச் சிற்ப அழகில் கிறங்கி, அந்தக் காலகட்டத்திற்கே போய்க் கற்பனையில் சஞ்சாரம் செய்து, கல்கி அலர்கள் செய்திருக்கின்ற வர்ணனைகள் படிக்கப் படிக்க பரவசமூட்டுபவை. படிக்கின்றவனை படைப்பாளியாக, கவிஞனாக மாற்றுகின்ற வசீகரம் கொண்டவை.

சிவகாமியின் நாட்டியமும் அவள் செய்த சபதமும் சங்கீத ஒலிகளும் கலையுள்ளம் கொண்ட ஒவ்வொரு மனிதனையும் மயக்கும்.

### பார்த்திபன் கனவு

இக் கதையும் சுதந்திரப் போராட்டம் தீவிரம் அடைந்த காலத்தில் எழுதப்பட்டது. அந்த சுதந்திர தாகத்தை பார்த்திப சோழனிடமும் விக்கிரம சோழனிடமும் காணலாம். இது சிவகாமியின் சபதம் நாவலின் தொடர்ச்சி நாவலாகவும் கருதப்படும்.

இவை அனைத்திலும் எவையெல்லாம் நிஜ சரித்திரம், எவையெல்லாம் சரித்திரத்தின் நீட்சியாக உருவாக்கப்பட்ட கற்பனைச் சம்பவங்கள் எனப் பிரித்தறிய முடியாதபடி பின்னிப் பிணைந்து இருப்பது, அமரர் கல்கியின் ஜீவிய எழுத்துத் திறனுக்குச் சான்று.

" தமிழ் வாசகர்கள் பெற்ற இலக்கிய வரமே கல்கி"

# ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பதனால் ஏற்படும் நன்மைகள்

அவுஸ்திரேலியா ஒரு பல்லினக் கலாச்சார நாடு. பல மொழிகளையும் கலாச்சாரங்களையும் கொண்ட ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் அன்புடன் வாழ வேண்டுமாயின் அவர்கள் பிற மொழிகளையும் ஓரளவிற்கு அறிவது நல்லது.

இரண்டாவது மொழியைப் படிப்பதில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். அதனால்தான் மிகச் சிலர் மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியைக் கற்கின்றனர். எனினும் நீங்கள்ஒன்றுக்கு மேற்பட்ட மொழியைக் கற்பதற்குப் பல நல்ல காரணங்கள் உண்டு.

வெளி நாட்டு மொழிகளைக் கற்பதன் மூலம் நான் கண்டுகொண்ட மிகப் பெரும் நன்மை, அந்த மொழியில் உள்ள புத்தகங்களைப் படிக்கக்கூடியதாக இருந்தது. வேறு மொழிகளில் உள்ள புத்தகங்களின் அறிவினைப் பெற முடிகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் அறிவால் தொழில் வசதியைப் பெற முடியும். இத் திறமை இருந்தால் உலகின் எப்பகுதியிலும் தொழில் செய்யலாம்.

ஒரு நாட்டிற்குப் போய் அவர்கள் உங்களையும் புரியாமல் நீங்கள் அவர்கள் கூறுவதையும் விளங்காமல் அச் சுற்றுலாவை மகிழ்ச்சியோடு கழிக்க முடியாது.

பல மொழிகளைக் கற்பதன் மூலம் நீங்கள் பெறக்கூடிய இன்னுமொரு நன்மை, அது உங்கள் மூளையை வளர்ச்சியடைய செய்யும். உங்களை அறிவுக் கூர்மை உடையவர்கள் ஆக்கும். பிற மொழிகளைக் கற்கும்போது மூளை சுறு சுறுப்படைகின்றது.

அத்துடன், மனிதராகிய நாம் ஒவ்வொருவரும் இன்னொருவர் எது கூறுகின்றார் என்று கண்டு பிடிப்பதற்கு காரணம் மொழியாகும். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பதனால் உலகில் வளர்ச்சியடைய முடிகின்றது. மற்றும் நீங்கள் உங்கள் மூளை சக்தியை வளர்க்கலாம்.

ருக்சிகா

# தன்னம்பிக்கை

காரைக்கால் எஸ். வீரப்பன்
LIC, முகவர், தலைவர் மன்ற உறுப்பினர்

உங்களை உங்களுக்குப் பிடிக்கிறதா? உங்களால் உங்களை நேசிக்க முடிகிறதா? நிற்க. மனசுக்கு உற்சாகம் அளிக்கக் கூடியது தன்னம்பிக்கை. தன்னை வளர்த்துக் கொள்ளுதல், நேரத்துடன் செயல் படல், தனி மனித முன்னேற்றம், மனிதன் வாழ வேண்டிய விதம் ஆகிய அனைத்தும் தன்னம்பிக்கையில் உள்ளது. தைரியமாக இருங்கள் தன்னம்பிக்கை வந்துவிடும். நாம் தன்னம்பிக்கை உள்ள மனிதனாக வாழ நம்மிடமுள்ள மகாசக்தியை நாம் அடையாளம் காணவேண்டும்.

ஒரு முட்டைக்குள் உறங்கும் கோழிக்குஞ்சு வெளியில் வருவதற்கான வெப்பத்தை வேண்டுமானால் தாய்க்கோழி தரலாம். ஆனால் ஓட்டையுடைத்துக் கொண்டு வெளியில் வரவேண்டும் என்ற விருப்பத்தை யார் தர முடியும். குஞ்சுக்கு அந்த ஆர்வமும் ஆசையும் தானாக இருந்தால்தான், அது வெளியில் வரமுடியும். ஒரு பெற்றோர் குழந்தைக்கு உணவு, உடை, அறிவு, கல்வியையும் மட்டுமே தர முடியும். குழந்தைக்கு தன்னம்பிக்கையைத் தாயோ தகப்பனாரோ தர இயலாது. தன்னம்பிக்கையென்பது வளரும் குழந்தையுடையது. அது கையில் உள்ளது அதன் வாழ்க்கை.

தன்னம்பிக்கையை எழுத்தாலும் பேச்சாலும் தூண்டியவர்களில் ஒருவர் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி அவர்கள். உன்னால் முடியும் தம்பி என்ற வார்த்தையை முதலில் உபயோகித்தவர் அவர்தான். தன்னம்பிக்கையென்றால் டாக்டர் அவர்கள் நினைவுக்கு வரவேண்டும். அந்த தூயவுள்ளம் 2013-01-21 அன்று இறைவனிடம் சேர்ந்துவிட்டது. திருவள்ளுவர் காலம் முதல் விவேகானந்தர் காலம் வரை இந்த மண்ணில் விளைந்த தன்னம்பிக்கை உணர்வுகளை நாம் உணர்ந்திருந்தால் நாம் எப்படியோ இருந்திருக்கலாம். உண்மையில் உலகம் எல்லோருக்கும் சொந்தமானது. சொந்தக்காரர்கள் பலரே இன்னும் அதையறியாமல் இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

விவேகானந்தர் போதித்த - முயற்சி, விடா முயற்சி, கடின உழைப்பு, இவை மூன்றும் சாதிக்கக்கூடிய சாதனைகள் கொஞ்சமில்லை. ஏன் இக்கால மாணவர்களோ, மாணவிகளோ அவரின் போதனைகளைப் பின்பற்றவில்லை? சோம்பேறித்தனமாகவும் பல பிரச்சினைகளில் தலையிடுவதிலும்தான் இருக்கிறது இன்றைய இளைய சமுதாயம். எப்படித் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளமுடியும்? “படுத்துக்கிடந்தால் படுக்கையே உனக்குச் சாக்காடு; எழுந்து நட பூமி உனக்கொரு பூக்காடு”. இந்தப் பூக்காட்டை வசமாக்கிக் கொண்டால் தன்னம்பிக்கை வளரும். ஆனால் இந்திய நாட்டில் இந்த நல்லதைச் சொன்னால் நம்மைப் பலருக்கும் பிடிக்காமல் போய்விடும். இந்நிலை மாறவேண்டும்.

அமெரிக்காவில் பிரபல கோடீஸ்வரர் ராக்ஃபெல்லர், முதுமையானவர் கடும் உழைப்பாளி. நாளுக்கு ஒரு நாடு என்று பயணம் செய்பவர். ஒருமுறை அவர் பயணம் செய்யும்போது பக்கத்தில் உட்கார்ந்திருந்த இளைஞர் ஒருவர் அவரை வியப்புடன் பார்த்தார். பயணம் செய்யும் போதுகூட ஏதோ பணி செய்து கொண்டிருந்தார். "ஐயா, இந்த வயதிலும் நீங்கள் இப்படிக் கடுமையாக உழைக்க வேண்டுமா? ஏகப்பட்ட சொத்து சேர்த்துவிட்டீர்கள், உட்கார்ந்து சாப்பிடலாமல்லவா?" என்று பணிவுடன் கேட்டார். ராக்ஃபெல்லர் சொன்னார், "நல்லது, இந்த விமானத்தை விமானி நல்ல உயரத்தில் பறக்க வைத்திருக்கிறார். சிரமப்பட்டு அதுமேலே ஏறிவிட்டது. சுலபமாகப் பறக்கிறது. இந்த இஞ்சினை இப்போது அணைத்துவிட்டால் என்ன ஆகும்? விபத்து ஏற்படுமல்லவா. வாழ்க்கைப் பயணமும் அப்படித்தான். கடுமையாக உழைத்து மேலே வரவேண்டியிருக்கிறது. உழைப்பை நிறுத்திவிட்டால் தொழிலில் அல்லது வேலையில் விபத்து ஏற்படும்." உழைப்பு வருமானத்திற்கு மட்டுமல்ல உடல் ஆரோக்கியத்திற்கும் மனமகிழ்ச்சிக்கும் கூட என்றார் ராக்ஃபெல்லர்.

இன்னொரு சம்பவம், ஆப்ரஹாம் லிங்கன் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பினார். மறுநாள், ஞாயிற்றுக்கிழமை, தேவாலயத்திற்கு சென்று பிரார்த்தனை செய்தார். மதகுரு பாவ புண்ணியங்கள் பற்றி உரை நிகழ்த்திவிட்டு, பிறகு சொர்க்கம் நரகம் பற்றி விளக்கம் தந்துவிட்டு, "உங்களில் யார் சொர்க்கம் செல்ல விரும்பிகிறீர்கள்? கையை உயர்த்துங்கள்", என்றார். வந்திருந்தவர் அனைவரும் கையை உயர்த்தினர். லிங்கன் மட்டும் துளியும் சலனமின்றி அப்படியே அமர்ந்திருந்தார். "நீ சொர்க்கம் செல்ல விரும்பவில்லையா?" என்றார் பாதிரியார். "எனக்கு சொர்க்கத்திலும் நரகத்திலும் வேலையில்லை ஆனால் பாராளுமன்றத்தில் வேலையுள்ளது, மக்களுக்குச் சேவை செய்ய, அதனால் பாராளுமன்றம் செல்லவே ஆசைப்படுகிறேன்", என்றார். அப்படிப்பட்ட ஆசைதான் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஆவதற்கு துணைபுரிந்தது. அவரது தன்னம்பிக்கையைப் பாருங்கள். நீங்களும் சாதிப்பீர்களா? சாதிக்கவேண்டுமென விருப்பம் கொள்ளுங்கள்.

மற்றொருமுறை லிங்கன் தான் வாழ்ந்த இடத்திலிருந்து டவுனுக்குச் செல்ல எண்ணினார் பணமில்லை. சாலையோரத்தில் நின்று பார்த்தார், ஒரு லாரி சென்றது அதை நிறுத்தினார். "டவுனுக்குச் செல்ல வேண்டும்", என்றார். ஓட்டுநர் பணம் கேட்கவே, பணமில்லாததால், அவர் தன் கோட்டை மட்டுமாவது தான் செல்ல வேண்டிய இடத்தில் சேர்த்துவிடச் சொன்னார். லாரி ஓட்டுநரோ அவரது நிலையை அறிந்துகொண்டு, தாங்களே கோட்டையணிந்துகொண்டு லாரியில் வந்துவிடுங்கள், செல்ல வேண்டிய இடத்தில் தங்களை விட்டுவிடுகிறேன் என்றார். லாரி ஓட்டுநரின் எண்ணம், கோட்டையெடுத்துச் செல்வதும், இவரை அழைத்துச்செல்வதும் ஒன்றுதான் என்று எண்ணி அவரை டவுனில் சேர்த்துவிட்டார். இதனால் என்ன தெரிகிறது. சாமர்த்தியமாகப் பேசி காரியத்தைச் சாதித்துக்கொண்ட லிங்கனின் தன்னம்பிக்கை நமக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

தன்னம்பிக்கைக்கும் மனசுக்கும் நிறையத் தொடர்பு உண்டு. மனசு இல்லையேல் தன்னம்பிக்கையில்லை. மனசு முக்கியம். மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கவேண்டாம். மனசுக்கு அவ்வளவு உயர்வு உண்டு. சரியான நல்ல விஷயங்களை நினைத்து நினைத்து மீண்டும் மீண்டும் சந்தோஷப்படவேண்டும். மனதை ஊக்கப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் நல்ல விஷயம் பெரியதாகி மனதும், நமது தன்னம்பிக்கையும் மேலோங்கும். தன்னம்பிக்கையுள்ளவர்களுக்கு வாழ்வில் பிறர் எந்த கேள்வி கேட்டாலும் உடனே பதில் தரக்கூடிய அறிவுவேண்டும். யாராவது விடையைச் சொல்ல மாட்டார்களா என்று எதிர்பார்க்கக்கூடாது. அதற்குதான் சிறந்த கல்வி கற்க வேண்டும். கல்வியே உயிர். கல்வியே சுவாசம் என்று எண்ண வேண்டும். நீங்களே விடை காணுங்கள், அதுதான் உண்மையான தன்னம்பிக்கை.

தன்னம்பிக்கை உள்ளவர்களின் எண்ணங்கள் வாழ்வை உருவாக்குகின்றன. எண்ணங்களை மனம் உருவாக்குகின்றது. மனம் உங்கள் வசம் இருக்க வேண்டும். காரணம் மனம் மிக நல்ல வேலைக்காரன். தன்னம்பிக்கை உள்ளவர்கள் யாரைப் பார்த்தாலும் உங்கள் கஷ்டங்களைச் சொல்லி புலம்பவேண்டாம். நம்மிடம் ஏதேது இல்லை என்று சொல்லி அழ வேண்டாம். எதை அடையவேண்டும் என்று திட்டமிடுங்கள். எல்லா அம்சங்களும் நம்மிடம் உள்ளது என்று எண்ணுங்கள், தன்னம்பிக்கை வளரும், அடையவேண்டும் என நினைத்ததை அடைவீர்கள். தன்னம்பிக்கை உள்ளவர்கள் வாழ்க்கையை கொண்டாடவேண்டும் என்கிறார் ஓஷோ. ஆனந்தமாக இருங்கள், ஆனந்தமாக இருங்கள் அதுதான் தன்னம்பிக்கைக்கும் வெற்றிக்கும் வழிவகுக்கும்.

பாரதி சொன்னதுபோல, “பூட்டைத் திறப்பது கையாலே, நல்ல மனந் திறப்பது மதியாலே; பாட்டைத் திறப்பது பண்ணாலே” என்பதுபோல தன்னம்பிக்கையையும், வெற்றியையும், விடாமுயற்சியையும், சிறந்த உழைப்பையும், சிறந்த கல்வியையும் கற்று பெரிய மருத்துவராகவோ, பொறியாளராகவோ அல்லது வேறு துறையில் வல்லமைப் படைத்தவராக ஆக்கப்பட்டு இந்த நாட்டிற்கு சேவை செய்து, அன்னை தெரசா போல பல உதவிகளை, இல்லாதவர்களுக்கு அற்பணித்து, வாழ்க்கை என்பது பனித்துளி என்று எண்ணி தன்னம்பிக்கையை தளராது வளர்த்து, நல்லதே நினைப்போம், நல்லதே செய்வோம் என்று கூறி தன்னம்பிக்கையை வாழ்த்துவோம்!

# உதவிக்கரம்

வீட்டிலிருந்து இலக்கு எதுவுமின்றி தடுமாறிய நிலையில் ஒருவர் வெளியே வந்து பூங்காவை நோக்கி நடந்தார். அதைக் கண்ட நான் அவருக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன் அவரை நெருங்கினேன். “வணக்கம் ஐயா, உங்களது பெயர் என்ன, ஏதாவது உதவி வேணுமா” என்று நான் அவரிடம் கேட்டேன். ஆனால் அவர் எதுவுமே பேசாமல் நடந்து கொண்டிருந்தார்.

குழம்பிய நான், அவருக்குப் பின்னாலேயே சென்றேன். திடீர் என அவர் பையில் இருந்து ஒரு துண்டு விழுந்தது. நான் உடனே சென்று அந்தத் துண்டை எடுத்து அது என்னவென்று பார்த்தேன். அந்த்த் துண்டில் அந்த முதியவரின் பெயரும், விலாசமும் இருந்தது.

பரிதாபமாக இருந்த அந்த முதியோரை அங்கு விட்டுச் செல்ல என் மனம் விரும்பவில்லை. ஆகையால் அந்த முதியோரை எனது கையில் பிடித்துக்கொண்டு அவரது விலாசத்தில் கொண்டுபோய் விட்டேன். அவரை வீட்டில் கொண்டுபோய் விட்டதும் அவரது மனைவி என்னிடம் நன்றி கூறி, அவரது கணவன் ஓர் ஊமை என்பதையும் அவருக்கு நடந்த எதிர்பாராத ஒரு விபத்தினால் மனநிலை பாதிக்கப்படுள்ளார் என்பதையும் என்னிடம் கூறினார்.

அவர் இப்படிப் பாதிக்கப்பட்டதனால்தான் தன்னையே மறந்து திசை மாறி அடிக்கடி செல்வார் என்றும் தெரிந்துகொண்டேன். அந்த வயதானவரின் நிலையை நினைத்துப் பார்க்க மிகவும் கவலையாகவும் பரிதாபமாகவும் இருந்த்து. இப்படி ஒருவருக்கு உதவியதை நினைத்து நான் மகிழ்ச்சிப் படுகிறேன்.


**சாமந்தி சிங்கராசா**

# புதியவன்

கேதார சர்மா

சருகுகள் மூடிக்கிடக்கிறது முற்றம்
புழுதியில் தொலைந்து போய்விட்டன காலடிச்சுவடுகள்

எல்லாமே மாறிவிட்டிருக்கிறது
உள் நுழைந்திருந்தன பக்கத்து வேலிகள்



கூரையை தொலைத்து வானம்பார்த்திருந்தன
வடுக்களை சுமக்கும் சுவர்கள்

கதவுகளும் சாளரங்களும் களவாடப்பட்டு
எல்லா வழிகளும் திறந்துவிடப்பட்டிருக்கின்றன

தளர்ந்த கால்களில் தள்ளாடி நடக்கிறான் இவன்

புதர்மண்டி கிடக்கும் பழைய வீட்டைத்தவிர

எல்லாமே புதியவை இவனுக்கு
எல்லோருக்கும் புதியவன் இவன்

முற்றத்திலேயே எலி வளைகள் முளைத்துவிட்டிருந்தன

கனிகள் களவாடப்பட்டு காய்ந்து கிடக்கின்றன வேர்கள்

கொல்லையில் எப்போதோ நட்ட கொய்யா மட்டும்
இன்னும் சில கனிகளோடு
இப்போது பசி அடங்க கொய்யா போதும்

சிதறிக்கிடக்கும் ஈர்க்குகளில்
ஒரு ஈர்க்கட்டு செய்யவேண்டும்
கட்டுவதற்கு ஒரு கயிறுதான் இல்லை

கூட்டினாலும் சருகு உதிரும், குழம்பினான்
தோளில் வலித்தது ஒரு சன்னக்காயம்

சிதறிக்கிடந்த ஈர்க்குகள்
சேர்த்துப்பிடித்து கூட்டத்தொடங்கினான்
சேர மறுத்து ஈர்க்குகள் குத்தின,
சில துண்டுகளாகி முறிந்து வீழ்ந்தன

சேர்த்து கட்ட கயிறொன்று வேண்டும்
தேடி தேடி தளர்ந்துபோனான்

உறக்கம் தவிர்க்கும் தெம்பை இழந்துவிட்டிருந்தன விழிகள்

முற்றத்தில் சருகுகளோடு உறங்கிப்போனான்
கண் அயர்ந்த போதும் கனவுகள் வரவில்லை


# ஆறு

## (தொடர் கதை)
## அத்தியாயம் 2

- சூர்யபுத்திரன்

முன் கதைச்சுருக்கம்: ஊரிலேயே பெரிய மனிதரும் பணக்காரருமான 72 வயதானமுத்துராஜப்பிள்ளையும் அவருடைய இரண்டாவது சன் நடராஜப்பிள்ளையும் அடுத்தடுத்துகொலை செய்யப்படுகிறார்கள். இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையிலானவிசாரணைக்குழுவிற்கு உதவுவதற்காக சிஐடி ஆபீசர் ஆனந்த் எழும்பூருக்கு வருகிறார் .இனி....

நவநீதகிருஷ்ணன் ஹோட்டலில் ட்ராப் செய்து விட்டுச் சென்றபின் சிறிது நேரயோசனைக்குப் பின்னர் முத்துராஜப்பிள்ளையின் family tree ஐ வரைந்து பார்த்தான் ஆனந்த்




இவர்களைத் தவிர அங்கு வேலை செய்பவர்கள், வந்து போகின்றவர்கள் என்று ஒரு பட்டியல்போட்டான். சமையல்கார வேணு, பால்க்கார காவேரியம்மா, தோட்டக்காரன் மாரியப்பா,டிரைவர் பரந்தாமன், கூர்க்கா ராஜு இவர்களுடன் கனகவல்லியையும் மீனாட்சியையும்கவனித்துக் கொள்ள குடும்ப டாக்டர் திருமதி மரகதம் ராஜசேகர்.

பெரியவர் எழுதி வைத்திருக்கும் உயில் பிரகாரம் சொத்துக்கள் மூன்று பிள்ளைகளுக்கும்சமனாகப் பங்கிடப்பட்டிருக்கின்றன. மூத்தவர் கைலாசபிள்ளை பிரமசாரியாகவே 54வருஷங்கள கழிச்சிட்டார். அப்பப்போ கோயில் குளம்னு கிளம்பிடறதும் சிங்கப்பூர், மலேசியா,தாய்லாந்து என்று வெளிநாடுகளில டிராவல் பண்ணுறதுமே அவரோட வேல. எந்தப்பொறுப்பையும் ஏத்துக்காம ஜாலியா வலம் வருவாரு.

இரண்டாமவர் நடராஜபிள்ளை தான் மில், பாக்டரின்னு பிஸியா வேல பார்த்திட்டிருந்தாரு.அவரோட கொலைக்கப்பறம் எல்லாப் பொறுப்பும் மகன் பிரகாஷோட தலையில விழுந்திடுச்சு. 52 வயசில கணவன் கொலை செய்யப்பட்டது அவரோட சம்சாரம் மீனாட்சிய ரொம்பவேபாதிச்சிருச்சு. பிள்ளைகள் பிரகாஷும், காலேஜ்ல பிகாம் படிச்சிட்டிருக்கிற காவ்யாவும்ஆறுதலா இருக்காங்க.

மூன்றாவது பொண்ணு கலையரசி எல்லா பிஸினசிலயும் பங்குதாரரா இருந்தாலும்அவ்வப்போ ஏதாவது டாகுமென்ட்ல சைன் பண்றதோட சரி. ஹஸ்பன்ட் சுந்தரமூர்த்தி தான்பிரகாஷுக்கு ரைட் ஹாண்டா இருந்து ஹெல்ப் பண்ணிட்டிருக்கார். பிள்ளைகள் மைதிலியும்வாசுகியும் ஆர்ட்ஸ் காலேஜ், இன்ஜினியரிங் காலேஜ்ல படிச்சிட்டிருக்காங்க.

கணவனையும் இரண்டாவது மகன் நடராஜபிள்ளையையும் அடுத்தடுத்து பறி கொடுத்தகனகவல்லி அம்மாவோட நிலைமை தான் ரொம்பவே மோசமா இருக்கு. சித்த சுவாதீனம்பிடிச்ச மாதிரி மோட்டு வளையை அண்ணாந்து பார்த்திண்டு படுத்த படுக்கையாவே இருக்கா.

செக் அவுட் செய்து ரிஷப்ஷனில் சாவியை ஒப்படைத்து விட்டு டாக்ஸி ஒன்றில்முத்துராஜப்பிள்ளையின் பங்களாவை அடைந்தான் ஆனந்த். சிகரெட் ஒன்றை உல்லாசமாகஇழுத்துக் கொண்டிருந்த கூர்க்கா ராஜு அவசரமாக அதனை அணைத்துவிட்டு ஆனந்தைநெருங்கினான்.

"நீங்க யாரை பார்க்கணும் சார்?"

"சுந்தரமூர்த்தி சாரைப் பார்க்கணும். மெட்ராஸ்ல இருந்து வர்றேன். ஆனந்த்னு சொல்லு".

"ஒரு நிமிஷம் சார்". டெலிபோனில் தொடர்பு கொண்டான். தலையை அசைப்பது தெரிந்தது.
"உங்கள உள்ளே வரச் சொன்னார் ". கேட்டை திறந்து விட்டான்.

பங்களா மிகவும் அழகாக இருந்தது. குரோட்டன்ஸ், வாடாமல்லி இத்யாதி இத்யாதி பூ மரங்கள்எல்லாம் வரிசையாக உட்கார்ந்திருக்க ஒருவித நிசப்தம் குடி கொண்டிருந்தது. மரங்களுக்குதண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த அந்த மனிதன் ஆனந்தைக் கண்டதும் தலையை உயர்த்திப்பார்த்தான். இவன் தான் மாரியப்பாவாக இருக்க வேண்டும். கண்களுக்குள் அவனைப் படம்பிடித்துக் கொண்டான் ஆனந்த்.

வரவேற்பறையை நெருங்கினான் ஆனந்த். சோபாவில் உட்கார்ந்து ஏதோ பைலை பார்த்துக்கொண்டிருந்த சுந்தரமூர்த்தி புன்னகைத்தார். "உள்ளே வாங்க ஆனந்த், உட்காருங்க ".

அவருடைய புன்னகைக்குள் ஒருவித சோகம் ஒளிந்திருப்பது தெரிந்தது. கண்களில்கவலையை வாங்கி அதற்கு கண்ணாடி போட்டிருந்தார். முகம் சவரம் செய்யப்படாமல்இருந்தது.

ப்ரிப்கேசினுள் இருந்த ஒரு கவரை எடுத்து நீட்டினான் ஆனந்த். கவரின் வெளியே 'சென்னைபுதை பொருள் அகழ்வாராய்ச்சி மையம்" என்று ப்ரொம் அட்ரஸ் போடப்பட்டிருந்து. கவரைப் பிரித்துப் பார்க்காமலே பேசினார் சுந்தரமூர்த்தி.

"உங்களப் பத்தி உங்க நிர்வாக இயக்குனர் ராஜசேகர் என் கிட்டப் பேசிட்டார். இந்த ஊரில நீங்கஆராய்ச்சி பண்றது அதிலயும் ஸ்பெஷலா வரலாற்று சிறப்பு மிக்க முத்துராஜ பிள்ளையார்கோயில் பற்றி சிறப்புக்கள வெளிக் கொண்டுவாறது எங்க ஊருக்கே ரொம்ப பெருமையானவிஷயம். உங்க ஆராய்ச்சி முடியிற வரைக்கும் நீங்க எங்க அவுட் ஹவுஸ்ல தங்கிக்கலாம்".

"ரொம்ப தேங்க்ஸ் சார்".

"இருங்க கூல் ட்ரிங்க்ஸ் சாப்பிட்டுப் போகலாம். நானே உங்களை அவுட்ஹவுஸ்க்கு அழைச்சிட்டுப் போறேன்".

கூலாக ஆரஞ்சு ஜூஸ் அருந்திக் கொண்டிருக்க சுந்தரமூர்த்தி தீர்க்கமாக சொன்னார். "நீங்கஅவுட் ஹவுஸ்ல தங்கனும்னா ஒரு கண்டிஷன்".

குழப்பமாக அவரை நிமிர்ந்து பார்த்தான் ஆனந்த்.

"இந்த வீட்ட உங்க சொந்த வீடு மாதிரி நீங்க நெனச்சுக்கணும். வீட்டோட சாப்பாடு. நீங்கவிரும்பினா எங்க கூட உட்கார்ந்து டைனிங் ஹால்ல வந்து சாப்பிடலாம். வெளியிலபோறதுக்கு எப்ப வேணாலும் காரை யூஸ் பண்ணிக்கலாம். உங்க ஆராய்ச்சி முடியிறவரைக்கும் உங்கள எங்க கெஸ்டா கவனிச்சிக்கிறது எங்க கடமை'.

"நானும் என்னவோ ஏதோன்னு நெனைச்சிட்டேன். எல்லாம் உங்க விருப்பப்படியே ஆகட்டும் சார் ".

அவருடன் கூட நடந்தான்.

இரவு மணி 10.45. லைட்டாக டின்னர் சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் டிவி பார்த்த ஆனந்த்அப்படியே அசந்து தூங்கச் சென்ற வேளை பங்களாவினுள் இருந்து ஏதோ சத்தம் கேட்டது.பரபரப்பாக எழுந்து பங்களாவை நோக்கி ஓடினான். பிரகாஷின் அறையிலிருந்து தான் சத்தம்வந்தது. பங்களா உடனடியாக வெளிச்சம் வாங்கிக் கொண்டது.

லுங்கியும் பனியனுமாக இருந்த பிரகாஷ் சுந்தரமூர்த்தியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"யாரோ என் ரூம் யன்னல் வழியா எட்டிப் மாதிரி இருந்தது. வெளியே வந்தா ஒரு முகமூடிஉருவம் என்னைக் கண்டதும் தோட்டப்பக்கமா ஒடிச்சு. பின்னாலே ஓடினேன். அதுக்குள்ளேமர்மமா காணாமப் போயிடிச்சு".

சுந்தரமூர்த்தி இண்டர்காமில் கூர்க்கா ராஜுவுடன் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது தான் ஆனந்த் கவனித்தான். அந்த இரவு வேளையிலும் மாரியப்பாவின் உடல்வியர்வையில் சிறிது நனைந்திருக்க கால்களில் தொட்ட மண் கொஞ்சம் அப்பியிருந்தது.

(தொடரும்)

# நாட்டுப்பாடல் சிலேடை

முன்னொரு நாள் காலை நேரம் தன் வீட்டு முற்றத்திலமர்ந்து தன் குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருக்கும் பெண்ணை நோக்கி வரும் ஒருவன் அவளை விளித்து

வெயில் ஒழுகும், மழை ஒழுகா
வீட்டிலிருக்கும் பெண்ணே
உனது புருஷன் எங்கே

எனக் கேட்கின்றான். வந்தவனது சிலேடையான கேள்வியைப்புரிந்து கொண்ட அவளும் அவன் பாணியிலேயே அவனுக்குப் பதிலளிக்கின்றாள், இதோ

ஒரு புருஷனுக்கு
வாழ்க்கைப்பட்டேன் ஊரறியா
ஒன்பது புருஷனுக்குப்
பிள்ளை பெற்றேன்
ஊராள் புருஷன் என் மடிமேலே
என் புருஷன் தலைமேலே.

அவளுடைய பதில் சற்று விரசமாகத் தோன்றினாலும் அதை விளங்கிக் கொள்ளும்போது ரசிக்காமல் இருக்கமுடியாது. இனி உள்ளே போகலாம். வெயில் ஒழுகும் மழை ஒழுகா வீடு என்றால் அந்த நாட்களில் பெரும்பாலான வீடுகள் ஓலைகளினால் அல்லது தென்னை ஓலைகளைக் கொண்டு பின்னப்பட்ட கிடுகுகளினால், இன்னும் வன்னிப்பக்கங்களில் வைக்கோலைக் கொண்டு மேற்கூரை வேயப்பட்ட வீடுகளாகவே இருந்தன. அவைகளின் சிறப்பு என்ன வெனில் வெய்யில் காலத்தில் சூட்டிலிருந்தும், மழை காலத்தில் குளிரிலிருந்தும் பாதுகாக்கும். அது மாத்திரமன்றி வெயில் காலத்தில் ஓலைகள் காய்ந்து வீசும் காற்றின் காரணமாக மேலேழும்பியிருக்கும். அப்போது பகல் நேரங்களில் கீழிருந்து மேலெழும் சூரியனின் கதிர்கள் கூரைகளின் துவாரங்களூடாக வீட்டுக்குள் பாய்ந்து சிறு சிறு வட்டங்களாக சூரியனின் நகர்வுக்கேற்ப நகர்ந்து கொள்ளும். ஆனால் மழைகாலங்களில் மேலிருந்து கீழே விழும் மழைத்தண்ணீரில் ஒலைகள் நன்கு ஊறிப்படிந்துவிடும், அதன்காரணமாக துவாரங்கள் அடைபட்டு மழை நீரானது கீழ் நோக்கித் தாழ்வாரம் வழியாக வழிந்தோடும்.. இனி அவளுடைய கூற்றைப்பார்ப்போம், ஒரு புருஷனைத் திருமணம் செய்து கொண்டேன். யாரென முன்பின் அறியாத ஒன்பது பையன்கள் வந்து திருமணம் செய்வதற்காக ஒன்பது பெண் பிள்ளைகளைப் பெற்றேன், எங்கேயோ இருக்கின்ற ஒருத்தி கல்யாணம் செய்வதற்காக இதோ என் மடியில் பால் குடித்துக் கொண்டிருக்கின்ற இப்பையனைப் பெற்றேன். நான் திருமணம் செய்தவனோ தொழில் காரணமாக மேலே பனையில் ஏறிக்கொண்டிருக்கின்றான்.

இப்பாடல் திரு வே. ராமலிங்கம் என்னும் புலவர் எழுதியதாக
வெளியிடப்பட்ட நூலில் 60களில் நான் படித்த ஞாபகம்.

நவரட்ணம் வைத்திலிங்கம்

# அன்பு மகனுக்கு அப்பா எழுதுவது.!

வசதியாகத்தான் இருக்கிறது மகனே...
நீ கொண்டு வந்து சேர்த்த முதியோர் இல்லம்.

பொறுப்பாய் என்னை ஒப்படைத்து விட்டு
சலனமின்றி நீ வெளியேறிய போது, முன்பு நானும்
இது போல் உன்னை வகுப்பறையில் விட்டு விட்டு
என் முதுகுக்குப் பின்னால் நீ கதறக் கதறக்
கண்ணீரை மறைத்தபடி புறப்பட்ட காட்சி
ஞாபகத்தில் எழுகிறது!

முதல் தரமிக்க இந்த இல்லத்தை தேடித் திரிந்து
நீ தேர்ந்தெடுத்ததை அறிகையில்கூட
அன்று உனக்காக நானும் பொருத்தமான பள்ளி
எதுவென்றே ஓடி அலைந்ததை ஒப்பீடு செய்கிறேன்!

இதுவரையில் ஒருமுறையேனும் என் முகம் பார்க்க
நீ வராமல் போனாலும் என் பராமரிப்பிற்கான
மாதத் தொகையை மறக்காமல்
அனுப்பி வைப்பதற்காக மனம் மகிழ்ச்சியடைகிறது

நீ விடுதியில் தங்கிப் படித்த காலத்தில்
உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும்
படிப்பை நினைத்து உன்னை சந்திக்க மறுத்ததன்
எதிர்வினையே இதுவென்று இப்போது அறிகிறேன்!

இளம் வயதினில் நீ சிறுகச் சிறுக சேமித்த அனுபவத்தை
என் முதுமைப் பருவத்தில் மொத்தமாக
எனக்கே செலவு செய்கிறாய் ஆயினும்...
உனக்கும் எனக்கும் ஒரு சிறு வேறுபாடு.

நான் கற்றுக்கொடுத்தேன் உனக்கு...
வாழ்க்கை இதுதானென்று!
நீ கற்றுக் கொடுக்கிறாய் எனக்கு...
உறவுகள் இதுதானென்று!

நன்றி - முகநூல்

# மனைவி காலை வெட்டி வைத்துத் தேய்

ஒரு புலவர் இன்னொரு புலவரை மட்டம் தட்ட எண்ணி அவரிடம் கேட்டார், "நான் இன்று குளக்கரைக்குச் சென்ற போது என் காலில் ஐந்து தலை நாகம் தீண்டி விட்டது. அதற்கு என்ன செய்யலாம்?"

அந்தக் கேள்வியில் ஒளிந்திருந்த விளக்கத்தைப் புரிந்து கொண்ட இரண்டாவது புலவர் பின்வருமாறு விடை கூறினார்.

**"பத்துரதன் புத்திரன்**
**புத்திரனின் மித்திரன்**
**மித்திரனின் சத்துரு**
**சத்துருவின் மனைவி காலை வெட்டி வைத்துத் தேய்"**

இப்பொழுது இருவரும் என்ன பேசிக் கொண்டார்கள் என்று பார்ப்போம்.

முதலாவது புலவர் ஐந்து தலை நாகம் என்று சொன்னது நெருஞ்சி முள்ளை. நெருஞ்சி முள் காலில் குத்தினால் என்ன செய்ய வேண்டும்? காலைத் தரையில் வைத்துத் தேய்க்க வேண்டும்.

அதனைத் தான் இரண்டாவது புலவர் சொன்னார்.

**பத்துரதன் புத்திரன்-** பத்து என்றால் தசம். தசரதனின் புத்திரன் இராமன்.
**புத்திரனின் மித்திரன்-** மித்திரன் என்றால் நண்பன்.
இராமனின் நண்பன் சுக்கிரீவன்.
**மித்திரனின் சத்துரு-** சத்துரு என்றால் பகைவன்.
சுக்கிரிவனின் பகைவன் வாலி.
**சத்துருவின் மனைவி-** வாலியின் மனைவி பெயர் தாரை.

தாரையிலிருந்து காலை அதாவது **'தா'** விலிருந்து 'அரவை' வெட்டி விட்டால் தாரை என்பது தரை என்று ஆகிவிடுகிறது.


இப்போது புலவர் சொன்னது சரி தானே. ஆமாம், காலைத் தரையில் வைத்துத் தேய்க்க வேண்டும்.

சிங்கப்பூரிலிருந்து

க. மணிவண்ணன்

# விடுகதைகள்

1. அவனுக்கு வீடு, மற்றவர்களுக்கு வலை. அது என்ன?
2. கூவி அழைப்பான், கூடி உண்ணுவான். அவன் யார்?
3. வெளிச்சத்தில் தொடர்வான், இருட்டில் மறைந்திடுவான். அவன் யார்?
4. ஒரு நாற் சந்தியில் ஒரு துவிச்சக்கரவண்டி, ஒரு பேருந்து, ஒருமாட்டு வண்டி, ஒரு மோட்டார் வண்டி ஒரே நேரத்தில் வந்துவிட்டால்... எது நடக்கும்?
5. ஏறிக்கொண்டே போகும், ஆனால் இறங்காது. அது என்ன?
6. பணக்காரனுக்குத் தேவை, ஏழைக்கு இருக்குது, சாப்பிட்டால் இறந்துவிடுவீர்கள். அது என்ன?
7. தூக்கம் வரும்போது தானே மூடும் கதவு எது?
8. “தமிழ்” இல் எத்தனை எழுத்துக்கள் உண்டு?



## விடை

1. சிலந்தி வலை
2. காகம்
3. நிழல்
4. மாடு நடக்கும்
5. வயது
6. ஒன்றும் இல்லை
7. கண் இமை
8. மூன்று